தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு—அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 7 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991, புரட்டாசி 23 (8-10-'60). சனிக்கிழமை | இதழ் 17

சேற்றிலே சிக்கிய கார் கரை சேரும். ஊழலிலே சிக்கிக் கொண்ட காங்கிரஸ் ஒப்பேறுமா?

செய்திப்பாட்டு

இந்த - பழிகாரர் ஆட்சியிலே
பாடுபட்டுத் தேடினாலும்
பசிதணிக்கப் போதவில்லை - தோழனே !
இங்கே-பஞ்சம் பிடுங்குதடா-தோழனே ! (இந்தப் பழி

இங்கே-விலைவாசி மூணுபங்கு
வேலைக்கூலி ரெண்டு பங்கு
வேதனைதான் மீறுதடா-தோழனே !
நெஞ்சு-வெம்பித் துடிக்குதடா-தோழனே ! (இந்தப் பழி

இங்கே-காலமெல்லாம் வேலை செய்தும்
கால்வயிற்றுக் சஞ்சிகூடக்
காணலையே வாழ்வதெங்கே-தோழனே !
சுற்றிக்-கட்டத்துணி இல்லையடா-தோழனே ! (இந்தப் பழி

இன்று-காலையிலே சம்பளத்தை
கடைத்தெருவில் மாற்றையிலே
கள்ளநோட்டு என்று சொல்லித்-தோழனே !
என்னைக்-கைவிலங்கு போட்டானடா-தோழனே ! (இந்தப் பழி

எந்தன்-கைக்குழந்தை காய்ச்சலுக்குக்
காசில்லாமல் மூன்று நாளில்
கைநழுவ விட்டேனடா-தோழனே !
இன்னம்-சஞ்சிக்கு வகையுமில்லை-தோழனே ! (இந்தப் பழி

ஐயோ-நாடுவிட்டு நாடு சென்று
நல்ல வாழ்வு தேடப்போனால்
நடுக்கடலில் சாகிறாராம்-தோழனே !
கேட்க-நாதியில்லை வாழ்வுமில்லை-தோழனே ! இந்தப் பழி

இன்னும்-வாடாத மேனியுடன்
வடநாட்டான் இங்கிருக்க
வாடுகிறான் தமிழன் மட்டும்-தோழனே !
இந்த-வஞ்சகத்தைச் சாய்ப்ப தெப்போ-தோழனே! (இந்தப் பழி

—அருப்புக்கோட்டை, எம். எஸ். இராமசாமி

அரசியல் அரங்கம்

"வம்பன்" பதிலளிக்கிறார்

[அரசியல் அரங்கத்தில் அரசியல் குறித்த கேள்விகளுக்கு மட்டுமே பதிலளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்குத் தங்கள் அஞ்சலட்டைகளை அனுப்ப வேண்டுகிறோம். உயர்திரு வம்பன், அரசியல் அரங்கம், தென்றல், சென்னை-6.]

பூதான இயக்கம் பற்றித் தங்கள் கருத்தென்ன? வினோபா புதிதாகத் தொடங்க இருக்கும் சம்பத்து தானம் பற்றியும் உங்கள் கருத்தைத் தெரிவிக்கவும்.

—அ. முத்தப்பன், காரைக்குடி.

உருப்படியான பயன் எதுவும் கிடைத்துவிடாது. ஆனால், வினோபா பாவேயை முனிவராக்கவும், பொதுவுடைமை இயக்கத்தின் வேகத்தை மட்டந்தட்டி வைக்கவும், இந்தத் தானங்கள் பயன்படலாமல்லவா?

★

பள்ளிக்கூட விண்ணப்பத்தாள்களில் தாழ்த்தப்பட்டவர்கள் மட்டும் தங்கள் சாதியைக் குறிப்பிடலாமென்று சர்க்கார் அறிவித்திருப்பது சரியா?

—மு. ராஜசேகரன், பெங்களூர்.

தாழ்த்தப்பட்டவர்களை என்றும் தாழ்த்தப்பட்டவர்களாகவே நிலைப்படுத்தி வைக்கவும், அவர்களின் புரவலர்கள் தாங்கள்தான் என்று பறைசாற்றி நடிக்கவும், அதே நேரத்தில் கக்கன்போன்ற கங்காணிகளுக்கு பதவிச் சலுகைகள் தரவும், ஆவணங்கள் (Records) வேண்டாமா? அதற்குத்தான் பள்ளியிலிருந்தே ஆவணங்களைப் படைக்கிறார்கள்! எல்லாம் தேர்தல் சூதாட்டத்திற்குத்தான்!

★

இந்திய சர்க்கார் மதச்சார்பற்றதென்று சொல்லுகிறார்கள். சேப்பாக்கம் பகுதியிலுள்ள அரசாங்க அலுவலகங்களில் கதவுகளிலும், நிலைகள், பீரோக்களிலும் ஆயுத பூசையை யொட்டிச் சந்தனம் விபூதி குங்குமம் ஆகிய மதச்சின்னங்கள் காட்சியளிக்கின்றனவே? இது தகுமா?

நா. மணி, சேப்பாக்கம் சென்னை-5

உஷ்! இரைந்து பேசாதீர்! "மதம் பிடித்த எவனுக்கும் அரசாங்க அலுவல் கிடையாது. பதவி கிடையாது" என்று, சட்டம் பிறந்தால் அல்லவா, மதம் தலைகாட்டாமல் இருக்கும்! வடவர் பிரான் பிரசாத், சிருங்கேரி மடப் பண்டாரத்திற்குக் கால் கழுவிவிடுகிறாரே! தாய் 16 அடி தாண்டினால் குட்டி 8 அடி தாண்டாதா என்ன?

★

ஜனாதிபதி ராஜேந்திரப் பிரசாத் முன்னிலையில் இராவணன் உருவத்தைக் கொளுத்தினார்களாமே? ஏன் இந்த அக்கிரமம்?

—க. திராவிடதாசன், முதுகுளத்தூர்.

இதுதானய்யா மதம்! மதம்!! மதவெறி!!! மக்களுக்கு அபின் என்று சும்மாவா சொன்னான் மார்க்ஸ்?

★

ஐயா வம்பரே, இப்பொழுது காமராஜரின் பொற்காலம் என்று சிலர் எழுதியும் பேசியும் வருகிறார்களே, அது எவ்வாறு பொருந்தும்.

—சு. ஆறுமுகம், விருதுநகர்.

ஏன் பொருந்தாது? காமராசருக்குக் கிடைத்திருக்கிற வாழ்வு, கனவிலாவது அவரால் கண்டிருக்க முடியுமா? அவருக்குப் பொற்காலந்தான்?

★

மந்திரி சுப்பிரமணியம் எதற்காக இலண்டனுக்குப் போனார்?

நா. சுப்பிரமணியன், கோவிலூர்.

அழகர்சாமிக்குக் கொல்லை வழியில் பதவியும், பதவி போதாதென்று பென்சனும் கிடைக்கச் செய்த அபவாதத்தையும் அதன் காரணமாக எழுந்த பல நூறு வழக்கறிஞர்களின் எதிர்ப்பையும் சமாளிப்பதற்கு ஆலோசனை செய்யப் போயிருக்கலாம்.

★

குடும்பக் கட்டுப்பாட்டினால் திராவிடர்களுக்கு நன்மையா?

—தி. கருணாகரன், சிதம்பரம்.

திராவிட மக்களின் பெருக்கத்தைக் குறைத்தால்தானே டில்லி ஏகாதிபத்தியம் நீடிக்க முடியும்?

★

பிரதமர் நேருவுக்குப் பின், அவருடைய பதவிக்கு வாரிசாகக் காமராசர் வருவார் என்று அவருடைய பிரமுகர்களில் ஒருவர் கூறினார். இது சாத்தியமா?

—மா. முத்தையா, மதுரை

இமய மலையை எடுத்து இந்துமாக் கடலை மூடும்போது இதுவும் சாத்தியமாகலாம்! வடநாட்டான் அத்தனை மடையனில்லை! காமராசரை யாராவது காக்காய் பிடிக்கச் சொல்லியிருக்கலாம்!

★

ஓய் வம்பரே, பிரதமர் நேரு வைஜயந்திமாலாவுக்கு மாலை போட அவள் நேருவுக்கு மாலை போட்டாளாம். இதன் தத்துவம் என்ன?

—சி. வளவன், சென்னை-17

அவர், அரசாங்கச் செய்திப்பட நடிகர்! இவள், கதைப் பட நடிகை! மொத்தத்தில் இருவரும் நடிகர்கள்! ஒரே தொழிலைச் செய்கிறவர்கள் என்ற தோரணையில் நெருங்கிய நட்பும் மரியாதையும் காட்டிக்கொள்ள விரும்பினார்களோ என்னவோ! ஆனால், நேரு, இத்தகைய செயல்களால் சுவை காண்பவர்!

★

நடைபாதை வாசிகளை இரவில் நகராண்மைக் கழகப் பள்ளிகளில் தங்க அனுமதிக்கலாம் என்று மேயர் கூறியிருக்கிறார். இதனால் பள்ளிப் பிள்ளைகளின் சுகாதாரம் பாதிக்கப்படுமல்லவா?

—பி. சிவப்பிரகாசம், சென்னை-1

சுகாதாரத் தொல்லையுடன் எதிர்பாராப் புதிய தொல்லைகளும் இதனால், தோன்றலாம். தவிர இத்தகைய பொறுப்பும் கவலையும் அரசாங்கத்தைச் சார்ந்தனவாகும்.

மாநகராட்சிக்குத் தற்போதுள்ள அதிகாரம் பொருளாதாரம் ஆகியவை இத்தகைய பொறுப்புகளுக்குப் போதா! வெற்றி காணமுடியாத வீண் தொல்லைகளை விலைக்கு வாங்குவது போல் இருக்கும், வேதிகை(பிளாட்பார) வாசிகளைப் பாதுகாக்க மாநகராட்சி முனைந்தால்!

★

பார்ப்பனர்களைத் தாக்குவதை இனிமேல் விட்டு விடப் போவதாகவும் பார்ப்பனீயத்தை மட்டுமே தாக்கப்போவதாகவும் பெரியார் கூறியிருக்கிறார். இந்த மாறுதல் வரவேற்கக்கூடியது தானே?

— எம். இராமலிங்கம், ஈரோடு.

வரவேற்கக்கூடியதுதான்! ஆனால், பார்ப்பனீயம் இல்லாதவன் எப்படிப் பார்ப்பானுவான்?

★

முஸ்லிம் லீக்கின் இலட்சியமான 'பாகிஸ்தான்' கிடைத்து விட்டது. இனியும் முஸ்லிம் லீக்கை ஏன் நடத்தி வருகிறார்கள்?

—வே. இலட்சுமணன், தாம்பரம்

தேசிங்குராஜன் கதை, அனார்கலி, அக்பர் ஆகிய சினிமாக்களை ஆராய்வதற்காக இருக்கலாம்?

★

இடது சாரிக் கட்சி என்றால் என்ன பொருள்? தி. மு. க. இடது சாரியா?

—மா. இராமசாமி, புதுக்கோட்டை.

நிர்மாணத் திட்டங்களிலும் செயல்களிலும் வேறுபட்டு, முழு முதற் கொள்கையில் ஒன்றுபட்டிருக்கும் கட்சிகளே, வலுப்பெறும் நிலைமைக்குத் தகுந்தபடி, ஒன்றையொன்று இடது சாரிக் கட்சி என்று சொல்வது அரசியல் வழக்கம். அதாவது வலுவான கட்சி வலுவற்ற கட்சியை இடது சாரி என்று கூறுவதுண்டு. தி. மு. க ஒரு முழு முதல் தேசிய இயக்கம். அதனுடைய நிர்மாணத் திட்டங்களில்—செயல்களில் மாறுபட்ட இடது சாரி, இனிமேல் தோன்றினால் உண்டு. இப்போது அது இடது சாரி அல்ல. சுருக்கமாகச் சொன்னால், தி. மு. க. தவிர திராவிடத்தில் இயங்கும் இன்றைய அரசியல் கட்சிகள் என்பன எல்லாம் திராவிடத்தின் அரசியல் கட்சிகளே அல்ல.

★

சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் உட்பகை இருப்பதாகச் சில பத்திரிகைகளில் செய்தி வந்ததே, இப்போது ஐ. நா. சபையில் குருச்சேவ் சீனாவுக்காக வாதாடுகிறாரே!

—வி. அருள், பொன்மலை.

உட்பகை இருப்பதாகச் சொன்னவர் யார்? டாலர் தேவியின் ஆதிக்கக் குழந்தைகளாக இருக்கலாம்! ரூபிள் தேவியின் ஆதிக்கக் குழந்தைகளைக் கேட்டுப் பாருங்கள்! அப்படி ஒன்றும் கிடையாதென்று அடித்துச் சொல்வார்கள்!

★

ஆயுதக்குறைப்பு செய்ய வேண்டிய தேசங்களோடு இந்தியாவையும் சேர்க்க வேண்டும் என்று குருச்சேவ் கூறியதன் கருத்தென்ன?

—ம. பெரியசாமி, திருவாரூர்.

அப்படிச் செய்தால்தானே சீனாவின் இமய எல்லை ஆக்கிரமிப்புக்கு ஆக்கம் செய்வதாக இருக்கும்?

★

ஆயிரம் கல் தூரத்தில் இருக்கும் இந்தி வேண்டாம் என்கிற தென்றல், ஆறாயிரம்கல் தொலைவிலிருக்கும் ஆங்கிலத்தை வரவேற்பது ஏன்?

—க. பாண்டியன், மானாமதுரை.

தூர வேற்றுமை காரணமல்ல தோழரே! இந்தி, வட நாட்டானுக்கு மட்டும் அரசாதிக்கம் தருவதற்காக வருகிறது! இங்கிலீஷ், இந்தியர் எல்லாருக்கும் பொதுத் துணைவனாக இருக்கிறது!

அது வருகிறது! இது இருக்கிறது! தெரிகிறதா வேற்றுமை?

★

ஒரு தேசத்திலிருந்து இன்னொரு தேசம் கோடிக் கணக்காகப் பணம் கடன்வாங்குகிறது. கடனைத் திருப்பிக் கொடுக்கா விட்டால் என்ன நடக்கும்?

—வ. வேலுமணி, கோவை.

உலக நீதி மன்றத்தின் மூலம், டிகிரி பெற்று, கடன் வாங்கிய நாட்டில் கடன் தீரும்வரை மேலாதிக்க உரிமை செலுத்தி, ஒன்றுக்குப் பத்தாகச் சுரண்டிக் கொண்டு போகும் கடன் கொடுத்த நாடு!

★

ஒரு நாட்டின் தலைவர் எல்லோருக்கும் பொதுவானவராக இருக்க வேண்டும். ஆனால், இராசேந்திரப் பிரசாத் இந்தியை ஆதரிப்பதிலும், இந்து மதத்தின் சார்பாகப் பேசுவதிலும் முன்னணியில் இருப்பது ஏன்?

—ப. முருகையா, கீரனூர்.

நண்பரே! இந்தியா ஒரு நாடா? எவன் சொன்னான் ஒரு நாடு என்று? இங்குள்ள அரசியல் ஏமாளிகளை ஏய்ப்பதற்காக எத்தர்கள் சில சமயம் மேடைகளில் சொல்வார்கள், ஒரே நாடு என்று! Indian union Government, என்றால் பல நாடுகளின் கூட்டு என்றுதான் பொருள்! புரிகிறதா? பிரசாத் எப்படி பொதுவாக இருக்கமுடியும்?

★

ஐ. நா. சபையில் குருச்சேவ் நடந்து கொள்வது சில்லரைத்தனமாக இல்லையா?

—செ. அன்புமணி, வாலாஜாபாத்.

சட்டியில் இருப்பதுதானே அகப்பையில் வரும்!

★

தி. மு. க. வின் அடுத்த போராட்டம் ஏதாவது அண்மையில் நடைபெற இருக்கிறதா?

கனக. சுப்பிரமணியம் சென்னை 1

இப்போதும் தி. மு. க. பாசறையில் தானே இருக்கிறது! இந்தி ஒழிப்புப் போருக்காக!

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 7 | 8-10-'60 | இதழ் 17

சமாதானத் தூதர் நேருவுக்கு நல்லெண்ணம் வருமா?

ஐக்கிய நாடுகள் சபையில் இப்போது ஒரு நாடகம் நடக்கிறது.

அந்த நாடகத்தில் வில்லன் வேடத்தை சோவியத் யூனியன் பிரதமர் நிக்கிட்டா குருச்சேவ் ஏற்றுத் திறம்பட நடித்து வருகிறார்,

சமாதானத்தூதர் பாகத்தை இந்தியத் துணைக் கண்டத்தின் முதல்வர் நேரு பண்டிதர் ஏற்றுக் கொண்டிருக்கிறார். காங்கிரசுக் காரர்களின் வார்த்தைப்படி சொன்னால் கிருஷ்ணபரமாத்மாவின் கைங்கரியத்தைச் செய்து வருகிறார் நேரு.

இதுதான் இன்றைய ஐ. நா, சபையின் நடவடிக்கை.

ஐ. நா. சபையிலிருந்து நமக்குக் கிடைக்கின்ற செய்திகள் ஒவ்வொன்றும், குருச்சேவ் எப்படிப்பட்டவர் என்பதையும், குருச்சேவின் மூலமாக அவரும் அவரைச் சார்ந்திருக்கும் நாட்டினரும் எத்தன்மை யுடையவர்கள் என்பதையும் நன்றாகப் புரிந்து கொள்ளச் செய்கின்றன.

குருச்சேவின் வருகையை எதிர்த்தும் மறுத்தும் நியூயார்க்கில் அமெரிக்க மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். முதலில் கிடைத்த இந்தச் செய்தி அமெரிக்கர்கள் எவ்வளவு இழிவான மனப் பான்மை யுடையவர்கள் என்று எண்ணும்படியாகச் செய்தன. எல்லா நாடுகளுக்கும் பொதுவான ஒரு சபைக்கு, உலக சமாதானத்திற்கு வழிவகுக்கும் ஒரு நிலையத்துக்கு, ஒருநாட்டுத் தலைவர் வருவதை எதிர்த்துக் கிளர்ச்சி செய்யும் இந்த அமெரிக்கர்கள் எவ்வளவு கீழ்த்தரமானவர்கள் என்று நினைக்கும்படியாக இருந்தது. அமெரிக்க குடியரசுத் தலைவரே, தம் நாட்டவரைத் தமக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யத் தூண்டி விட்டிருப்பதாகக் குருச்சேவ் கருத்துத் தெரிவித்த போது இருக்கலாம் என்று நினைக்கும் படியாகவும் இருந்தது

ஆனால் குருச்சேவ் எப்படி நடந்து கொண்டார்?

அந்தச் சாதாரண அமெரிக்கர்களைவிட மோசமாக நடந்து கொண்டிருக்கிறார்.

அவருடைய ஒவ்வொரு செயலும் அவர் எவ்வளவு சில்லறைத் தனமான பேர்வழி என்பதை எடுத்துக் காட்டுகின்றன. லெனின், ஸ்டாலின் போன்ற மாமேதைகள் இருந்த இடத்தில் இப்படிப் பட்டவர் இருக்கிறாரே என்று சலித்துக் கொள்ளும்படியாக அவர் நடந்து கொண்டிருக்கிறார்.

அவருடைய சில்லறைத் தனமான செயலால், ஐ. நா. சபையே கலைந்து விடுமோ என்று அஞ்சும் படியான நிலை ஏற்பட்டிருக்கிறது.

பிரிட்டிஷ் முதலமைச்சர் பாக்மில்லன் அவர்களைச் சந்தித்து உரையாடிய குருச்சேவ், முடிவில் அவரை வழியனுப்ப வரவில்லை. ஒரு விருந்தினருக்குக் காட்ட வேண்டிய மரியாதையைக் கூட அவருக்குக் காட்ட வில்லை குருச்சேவ்.

ஐ. நா. வின் பொதுச் செயலாளர் ஆமர்சீல்டு விலகவேண்டும் என்று குருச்சேவ் கூறியிருக்கிறார். ஆமர்சீல்டு துணிவிருந்தால் தானாக விலகிக் கொள்ள வேண்டும் என்று பேசியிருக்கிறார். ஆனால், ஆமர்சீல்டு தான்விலகப்போவதில்லை யென்று துணிச்சலாகக் கூறியபோது, குருச்சேவும் அவரைச் சேர்ந்தவர்களும், அந்தப் பெரிய ஐ. நா. சபைக் கூட்டத்திலேயே மேசையின் மீது குத்தித் தங்கள் ஆத்திரத்தைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதுவுமல்லாமல், ஆமர்சீல்டு பேசும் போது அவரை நோக்கிக் கையை ஓங்கியுமிருக்கிறார் குருச்சேவ்.

இன்னொரு முறை குருச்சேவ் பேசியபோது, அவர் ஆத்திரத்தின் வேகத் [illegible]ப் பொறுக்கமாட்டாமல், அவர் முன்னால் இருந்த ஒலிபெருக்கியை அகற்றி விடும்படி சபைத்தலைவர் உத்தரவிட வேண்டிய நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. இவ்வளவு தூரத்திற்குத் தம்மை ஒரு சரியான வில்லனாகக் காட்டிக் கொண்டிருக்கிறார் குருச்சேவ்.

பொதுச் செயலாளர் ஆமர்சீல்டை அவர் விலகும்படி கூறுவதற்குரிய காரணம் என்ன வென்றால், அவர் ஒரு சார்பாக நடந்து. கொள்கிறாராம் சரி, பொதுச்செயலாளராக இருக்கும் ஆமர்சீல்டை விலக்கி விட்டு வேறொருவரைக் கொண்டு வரலாமென்றால். அதையும் ஏற்றுக் கொள்ளவில்லை திரு. குருச்சேவ். அதற்கு என்ன காரணம் சொல்லுகிறார் என்றால். புதிதாக வரக் கூடியவரும் ஒரு சார்புடையவராகவே நடக்கக் கூடுமாம். அதற்காக, பொதுச் செயலாளர் பதவியை எடுத்து விட்டு, மூன்று பிரதிநிதிகள் அடங்கிய ஒரு குழுவை அமைக்க வேண்டுமாம். குருச்சேவ் கூறுகிற இந்த யோசனைப்படி. ஐ. நா. சபை எத்தனை நாளைக்கு ஒழுங்காக நடக்க முடியும்.

மேலை நாடுகளான, அமெரிக்கா, அதைச் சார்ந்த நாடுகளின் சார்பாக ஒரு பிரதிநிதியும், கீழை நாடுகளான இரஷ்யா அதைச் சார்ந்த நாடுகளின் சார்பாக ஒரு பிரதிநிதியும், மீதியுள்ள நடுநிலை நாடுகளின் சார்பாக ஒரு பிரதிநிதியும் ஆக மூன்று பிரதிநிதிகள் அடங்கிய ஒரு குழு இருந்து பொதுச் செயலாளரின் வேலைகளை நடத்த வேண்டும் என்கிறார் குருச்சேவ்.

இந்த மூன்று பிரதிநிதிகளும் கூடி என்றாவது ஒரு முடிவுக்கு வரமுடியுமா? மூவரும் எப்போதும் மூன்று திசையில் இருந்து கொண்டிருப்பார்களேயானால். ஐ. நா. சபையின் முன் நிற்கும் பிரச்சினைகள் எப்போது தான் ஒரு முடிவுக்கு வருவது? குருச்சேவின் இந்த யோசனை ஐ. நா. வுக்குக் குழிதோண்டுவதையொக்கும் என்று பல தேசத்துப் பிரதிநிதிகளும் கூறியிருக்கிறார்கள்.

ஆனால், வரட்டுத் தனமும், முரட்டுக் குணமும் உடைய குருச்சேவ் இப்படிச் செய்தால்தான். ஐ. நா. சபை நீடித்து வாழும் என்று திரும்பத் திரும்ப வற்புறுத்திப் பேசி வருகிறார்,

ஆமர்சீல்டு விலகாவிட்டால், அல்லது விலக்கப்படாவிட்டால், ஐ நா. விலிருந்து வெளியேறி வேறு ஒரு சபை ஏற்படுத்தப் போவதாகவும் சவால் விடுத்திருக்கிறார். ஆமர்சீல்டு இப்போதுதான் விலகப் போவதில்லை என்று கூறிவிட்டதால், குருச்சேவ் என்ன செய்யப் போகிறார் என்பதை இனிப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

குருச்சேவ் சொன்ன இன்னொரு திட்டம் குறும்புத்தனமும் போக்கிரித்தனமும் கொண்டதாகும். ஆயுதக் குறைப்புச் செய்ய வேண்டிய நாடுகளில் ஒன்றாக இந்தியாவையும் சேர்க்க வேண்டும் என்று கூறியிருக்கிறார். எந்த விஷயத்திற்கும் சகுனம் பார்த்து-சங்கராச்சாரிகளின் காலடியைக் கழுவிய தீர்த்தம் குடித்துக் காரியங்கள் செய்கின்ற ஒரு குடியரசுத் தலைவரைப் பெற்ற இந்திய அரசாங்கத்திடம் புத்தம் புதிய விஞ்ஞான ஆயுதங்கள் இலட்சக் கணக்கில் இருக்கக் கூடுமென்று குருச்சேவ் அஞ்சுகிறாரா? அல்லது, எங்கே இவர்கள் இராமபாணம் விட்டே நம்மை அழித்துவிடுவார்கள் என்று பயப்படுகிறாரா? அதெல்லாம் ஒன்றுமில்லை. இந்தியாவையும் ஆயுதக் குறைப்பு நாடாகச் சேர்த்துவிட்டால், சீனாக் காரனைக் கொண்டு, தேசத்தை வளைத்துக்கொள்ள வாய்ப்பாக இருக்கும் என்ற வஞ்சக நினைப்பாகத்தான் இருக்க வேண்டும்.

இப்போது நாம் குருச்சேவ் எப்படிப்பட்ட சமாதானப் பிரியர் என்று பார்த்துவிட்டோம். அமெரிக்கக் குடியரசுத் தலைவர் எப்படிப்பட்ட சமாதானப் பிரியர் என்பதும் உலகம் அறிந்த விஷயம்தான். இவர்கள் இருவரும் பேசுவதெல்லாம் சமாதானத்தைப்பற்றியேதான். ஆனால், ஒருவரையொருவர் சந்தித்து உடன்பாடு காண்பதுதான் இவர்களுக்குப் பிடிக்காத காரியமாயிருக்கிறது.

இப்போது நடுநிலை நாடுகள் ஐந்து சேர்ந்து, குருச்சேவும் ஐசன்ஓவரும் சந்திக்க வேண்டும் என்று ஒரு தீர்மானம் கொண்டுவந்திருக்கின்றன. இந்த நாடுகளின் தலைவராக பண்டிதர் நேரு விளங்குகிறார்.

ஐ. நா. சபையில் பண்டித நேரு சமாதானத்தைப்பற்றி மிக விளக்கமாகப் பேசிப் பல தேசப் பிரதிநிதிகளின் கைதட்டுதலைப் பெற்றுவிட்டார். ஆனால், கைதட்டுதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரித்தான நேருவின் பேச்சை குருச்சேவோ அமெரிக்கக் குடியரசுத் தலைவரோ கேட்டு நடக்கப் போகிறார்களா என்றால் அதுதான் இல்லை?

ஐசன்ஓவர், உளவு விமானங்களை அனுப்பியதற்கு மன்னிப்புக் கேட்காத வரையில் நான் அவரைச் சந்திக்கமாட்டேன்.

சீனாவைச் சேர்க்காத வரையில் நான் ஐ. நா. சபையை மதிக்கமாட்டேன்.

இப்படியெல்லாம் ஒரு பக்கம் குருச்சேவும். இரண்டு நாடுகள் பேசித் தீர்க்கக்கூடிய பிரச்சினையல்ல என்று ஐசன் ஓவரும் கூறி மறுத்துவிட்டார்கள்,

நேருவின் தீர்மானத்திற்கு ஆஸ்திரேலியா ஒரு திருத்தம் கொண்டு வந்திருக்கிறது. ஐசன் ஓவரும் குருச்சேவும் சந்தித்துப் பேசுவதைவிட நான்கு வல்லரசுகள் கூடிப் பேசுவது நலம் பயக்கும் என்பதே அந்தத் திருத்தம். அதை நேருவும் அவரைச் சேர்ந்தோரும் ஒப்புக்கொள்ளவில்லை. கூடிப் பேச வேண்டியவர்களோ எதற்கும் தயாராக இல்லை.

இந்த நிலையில் நேருவின் சமாதான முயற்சி பலிக்குமா என்பது முற்றிலும் சந்தேகத்திற்கிடமான பிரச்சினையாகவே இருக்கிறது. முடிவாகச் சொன்னால் இது வீண் முயற்சி என்றே கூறுவோம்.

இன்று அமெரிக்கர்களும் ரஷ்யர்களும், பயங்கரமான அழிவு ஆயுதங்களை உடையவர்களாயிருக்கிறார்கள். அதனால் அந்த இரு தேசத்தினருமே யாரையும் மதிக்கவோ இலட்சியப்படுத்தவோ தேவையில்லை என்று எண்ணுகிறார்கள். அவர்கள் ஒருவர்க்கொருவர் நேரடியாக அஞ்ச வேண்டிய சூழ்நிலை உருவானால் ஒழிய ஏதாவது ஓர் உடன்படிக்கைக்கு வருவார்கள் என்று நம்புவதற்கில்லை.

ஆகவே, உலகில் உள்ள நிற வெறி, காலனித்துவ அடிமை நிலை ஆகியவற்றையெல்லாம் ஒழிக்க வேண்டுமென்று கூறிச் சமாதான முயற்சியில் இறங்குவதைக் காட்டிலும், தமக்குள்ள நேரத்தையும் உழைப்பையும் இந்தியத் துணைக்கண்டத்தின் உட்புறம் திருப்பி, இங்குள்ள, ஜாதி வெறி, மத வெறி ஆகியவற்றைக் களைந்தும், தன்னுடைய ஆட்சியின் கீழேயே அகப்பட்டு முன்னேற முடியாமல் விழித்துக்கொண்டிருக்கும் நாட்டுப் பகுதிகளைப் பிரித்து அவற்றின் உரிமைகளை வழங்கியும், அந்தந்த நாட்டுப் பகுதிகளிலே விடுதலையும் அமைதியும் முன்னேற்றமும் பெருக வழி வகுப்பாரானால் உண்மையிலேயே நேரு போற்றுதலுக்குரியவராவார். அவருடைய முயற்சியும் பேச்சளவில் இல்லாமல் செயலளவில் வெற்றியளிப்பதாக இருக்கும்.

நேருவுக்கு வருமா இந்த நல்லெண்ணம்?

வெண்பாப் போட்டி-8.

★

'பட்' டென்று தொடங்கிப்
'படார்' என்று முடிக்கவும்.

இறுதி நாள் 23-10-60.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை-6.

கக்குவான் இருமல்

வெகு எளிதில் பரவக்கூடிய தொற்று நோயாகிய கக்குவான் இருமல் ஹெமோபிலியல் பெர்ட்டூஸிஸ்' என்னும் கிருமிகளால் பரப்பப்படுகிறது.

பெரும்பாலும் சிறுவர்களிடையே காணப்படுகிற இந்நோய் பிறந்து ஆறு மாதமாகாத குழந்தைகளையும் கூட விடுவதில்லை. இது சுவாசக் குழாயைப் பாதித்துக் கடுமையான இருமல் தோன்றும்போது குழந்தைகள் மூச்சு விடமுடியாதபடி தவிக்கின்றன; அப்போது இந்த இருமலுக்கே உரிய இழுப்பு சத்தம் கேட்கும்.

நோய் ஆரம்பத்தில் 'கக்குவான்' இல்லாமலிருக்கலாம்; நோயாளிகள் இருமும்போது முகம் சிவந்து, கண்கள் நீர் பெருகிக் கடுமையாகச் சிவந்துவிடும். கக்குவான் இருமல் பிடித்துள்ள குழந்தைகள் அடிக்கடி வாந்தியெடுப்பதால் உணவு தங்காமல், ஊட்டக் குறைவு ஏற்பட்டு, வேறு நோய்களை எதிர்க்கும் சக்தியையும் இழந்துவிடுகின்றன.

இந்நோய், பாதிக்கப்பட்டிருப்பவர் மூலமே நேரடியாகப் பரவுகிறது. நோயாளிகளின் மூக்கிலிருந்தும் தொண்டையிலிருந்தும் வரும் சளியும், அது பட்ட பொருள்களும் நோயைப் பரப்புகின்றன. இவர்கள் பலமாக இருமும்போது வெளிப்படுகிற சளி தெறித்து நோய் பரவுகிறது; இந்நோய் பள்ளிகளிலும் வேறிடங்களிலும் பரவுவதைவிட வீட்டிலேயே அதிகமாகப் பரவுகிறது. இது கக்குவான் இருமலாக மாறுவதற்கு முன் வெறும் இருமலாக இருக்கும்போது, ஆரம்ப கட்டத்தில், நோயாளிகளுடன் விளையாடும் பிள்ளைகளுக்கும் தாவுகிறது; நோய்க் கிருமிகள் தொண்டையிலும் மூக்கிலும் இருப்பதால் நோயாளி ஒவ்வொரு தடவை தும்மும்போதும் இருமும்போதும் கிருமிகள் வெளியே வருகின்றன.

இந்நோய் பீடித்த குழந்தைகள் உபயோகித்த பாத்திரங்களை உபயோகிப்பது, அல்லது அவர்களின் எச்சில்பட்ட பென்சில்களையும், பொம்மைகளையும் தொடுவது ஆகியவையும் இந்நோயைப் பரப்பும்; இவர்களின் ஆடைகள் மூலமாகவும் துணிகளின் மூலமாகவும் பரவுகிறது.

குழந்தை நோய்

கக்குவான் இருமல் பெரும்பாலும் குழந்தைப் பருவ நோயாகும் இது ஆறு வயதுக்குக் குறைந்த குழந்தைகளிடையேதான் அதிகமாகப் பரவுகிறது; இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இந்நோய் கண்டால் அபாயமாகக்கூடும். ஆறு மாதக் குழந்தைகளையும் இந்நோய்விடாது; இக்குழந்தைகளுக்கு இது மிகவும் அபாயகரமானதாகும். பத்து வயதுக்குப் பிறகு இந்நோய் அதிகமாகத் தோன்றுவதில்லை. ஒரு தடவை இந்நோய் தோன்றினுல் மீண்டும் இவை சாதாரணமாகத் தோன்றுவதேயில்லை. ஆண் குழந்தைகளைவிடப் பெண் குழந்தைகளைத்தான் இந்நோய் அதிகமாகப் பாதிக்கிறது: பெண் குழந்தைகளிடையே மரணமும் அதிகமாகச் சம்பவிக்கிறது!

குளிரில் பாதிக்கப்பட்ட பத்து தினங்களில் இந்நோயின் அறிகுறிகள் தென்படத் தொடங்கும்; இது ஏழு நாள் முதல் 21 நாள் வரையிலிருக்கும் நோயின் ஆரம்பக் கட்டத்தில்தான், அதாவது கக்குவான் இருமல் ஆரம்பமாவதற்குமுன் சாதாரண இருமலாக இருக்கையில், இது வெகு எளிதில் தொற்றும். இந்த சமயத்தில் இந்நோயின் தன்மைபற்றி யாரும் கவனிப்பதில்லை,

இந்நோய் தொடங்கிய ஏழு நாட்களிலிருந்து கக்குவான் தோன்றிய 21 நாட்கள் வரை இது பரவக்கூடிய நோயாகக் கருதப்பட வேண்டும்.

நோயின் அறிகுறிகள்

இந்நோய் மூன்று கட்டங்களாக வளருகிறது.

தடுமன்; முதலில் தடுமன் ஒன்று முதல் இரண்டு வாரங்கள் வரை நீடிக்கும்; நோயாளிக்கு லேசான காய்ச்சலிருப்பதோடு நெஞ்சில் சளியும் பிடித்திருக்கும். ஓயாத இருமலிருக்கும். இரவில் இது பலமாக இருக்கும். இந்நோய் எளிதில் பரவும். இரண்டு வாரம் கழிந்த பிறகு இரவில் இருமல் அதிகரித்து, வலிப்புக் கூறுகள் தென்படும்' சில வேளைகளில் வாந்தியெடுக்கும்.

வலிப்புக்கூறு:- வலிப்புக்கூறுகள் இரண்டு அல்லது நான்கு வாரங்கள் வரையிலிருக்கும்; இருமல், வலிப்பு நோய் போல வரும்; படுத்துக் கிடக்கும் குழந்தை எழுந்து தன் தாயை இறுகப் பற்றிக் கொள்ளும். சிறிது நேரம் மூச்சு இழுத்தவுடன் தொடர்ந்து இருமும். வாய் திறந்து நாக்கு வெளியே தள்ளிக் கொண்டிருக்கும். நெஞ்சு உலருவது வரையில் இருமுவது நிற்காது; கண்களில் நீர் நிறைந்து, விழிகள் பிதுங்கிக் காணப்படும்; குழந்தைகள் மூச்சுவிடுவதற்குக்கூட முடியாமல் திணறும்.

இருமல் நின்று மூச்சு இழுக்கத் தொடங்கும்போது இருமற்குரிய இழுப்பு சத்தம், கேட்கும்; குழந்தை வேர்த்துத் துவண்டுவிடும். வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும் நுரையும் சளியும் வருவதோடு அடிக்கடி வாந்தியெடுக்கவும் செய்யும்; குழந்தை தன்னையறியாமல் சிறுநீர் கழிக்கும்.

இந்த இருமல் 10 அல்லது 15 தடவை ஏற்படும்.

குணமாகும் நிலை:- குணமாகும் நிலையில் இருமல் சிறிது சிறிதாக நின்று குணமடையும். குளிர், குளிர்ந்த தண்ணீர் முதலியவை இருமலை விளைவிப்பதால் இவற்றைத் தவிர்க்க வேண்டும்

அதிகமாக வாந்தியெடுத்தால் குழந்தை சோர்வடைந்து சில வேளைகளில் வலிப்பு ஏற்படும். 'பிராங்கோ நிமோனியா நோய் தாக்குவதும் சுவாசப்பை திடீரென்று சுருங்குவதும் இயல்பான நிகழ்ச்சியாகும் கண்களிலும் மூக்கிலும் இரத்தம் கசியும். குடலிறக்கமும் ஏற்படக் கூடும்.

திடீரென்று ஏற்படுகிற இருமலின் விளைவாக கழுத்திலும், தலையிலும் மூளையிலும் உள்ள ரத்த நாளங்கள் சுருங்கி ரத்தம் கசியத் தொடங்கும்.

தடுப்பது எப்படி?

கக்குவான் இருமல் ஆரம்பித்து மூன்று வாரங்கள் வரையில் ஒதுக்குப்புறமான இடத்தில் படுக்க வைக்க வேண்டும். இதனுல், இந்நோய் வேறெவருக்கும் பரவாது! அதோடு வேறு நோயும் குழந்தையைப் பாதிக்காது. இரண்டு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளைத் தனியாக வைத்திருப்பது முடியாத காரியம்; இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தையைக்கூட தனியாக வைத்திருக்கவேண்டிய அவசியமில்லை; அதற்குத் திறந்த வெளிக் காற்று அவசியமாகும்.

கக்குவான் இரவு வேளைகளில் வந்து குழந்தைகளின் தூக்கத்தைக் கெடுப்பதால் பிற்பகலில் குழந்தைகளைத் தூங்க வைப்பது நல்லது.

காற்ரேட்டமுள்ள அறையில் குழந்தையிருக்க வேண்டும்; ஆனுல், குளிர் காற்று படக்கூடாது. அறையைச் சுத்தமாக்க வேண்டும்.

நோயாளி உபயோகித்த பாத்திரங்களை அவ்வப்போது சுடு தண்ணீரில் சுத்தம் பண்ண வேண்டும்; உபயோகித்த துணிகளும் கொதிக்கும் வெந்நீரில் சுத்தமாக்கப்பட வேண்டும் நோயாளியை கவனிப்பவர்களும் தங்கள் கைகளை அடிக்கடி நோய்க் கிருமி கொல்லுமருந்தால் சுத்தம் செய்து கொள்ள வேண்டும்.

கக்குவான் இருமலைத் தடுக்க மருந்து கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது; ஆறு மாதக் குழந்தைகளுக்கும் அதற்கு மேற்பட்ட வயதுக் குழந்தைகளுக்கும் கக்குவான் தடுப்பு மருந்து குத்தி வைக்கப்பட வேண்டும். இம்மருந்தை 'டிப்திரியா' 'டெட்டானஸ்" ஆகிய நோய்த் தடுப்பு மருந்துகளுடன் கலந்து மூன்று மாதம் முதல் ஆறுமாதம் வரையுள்ள குழந்தைகளுக்கு நான்கு தடவை. வாரத்துக்கொருமுறை, குத்தி வந்தால் இம்மூன்று நோய்களிலிருந்தும் முழுப்பாதுகாப்புக் கிடைக்கும்; தொற்று நோய்க் காலத்தின் போது குழந்தைகளுக்கு மீண்டும், ஊசி குத்தி வைப்பது நல்லது.

எந்தக் குழந்தைக்கும். அதன் வாழ்க்கையில் ஒரு சமயமில்லாவிட்டாலும் இன்னொரு சமயமாவது கக்குவான் இருமல் தோன்றும் என்று நம்பப் படுகிறது; இது தவருகும். இதற்குரிய மருந்து இப்போது கிடைக்கிறது; எல்லா குழந்தைகளுக்கும இது குத்தி வைத்துப் பாதுகாப்பைப் பெறுவது நலமாகும்.

(இந்திய அரசாங்கச் செய்தி பரப்பு இலாகா)

எங்கெங்கும் ஒளிவெள்ளம்! இன்பக் காட்சி!
எவ்விடத்தும் இயற்கைதரும் எழிலின் மாட்சி!
பொங்குமொளிப் புனலோடை பாயும் நீர்மை!
பூத்தொளிரும் பூஞ்சாரல் பொலியும் சீர்மை!
செங்கயல்கள் ஆற்ருேரம் நெளிந்து துள்ளும்!
செழுங்காட்சி பலகாணின் மகிழும் உள்ளம்!
கங்குல்அரக் கனையொழித்துக் கதிரோன் வந்தான்!
கனிவுதிகழ் அவனுட்சி வளர்க! வாழ்க!!

பாங்குமிகு செங்கதிரோன் ஆட்சி தன்னில்
பசுமைநிறை இயற்கைசிரித் திருக்கும்! இன்பத்
தீங்குயில்தேன் பாட்டிசைக்கும்! கருஞ்சு ரும்பு
தேம்பிழியாழ் தனைமீட்டும்! செழித்து நிற்கும்
ஓங்கியசெந் நெற்களெலாம் காற்றில் ஆடும்!
உரிமையுடன் பறவையெலாம் வானில் சுற்றி
ஏங்காமல் மகிழ்ந்திருக்கும்! இன்பம் மல்கும்!
எழுகதிரோன் ஆட்சியின்சீர் காணுய்! தம்பீ!

காலையிளம் பரிதியவன் வைய கத்தில்
கதிரொளியைப் பாய்ச்சி,இருள் நீக்கு கின்ருன்!
கோலநெறி பரப்பி,எழில் கூட்டு கின்ருன்!
குறைவில்லாப் பெருஞ்சீர்மை எய்து கின்ருன்!
சீலமுடை முன்னேற்றக் கழகத் தாரின்
சின்னமெனத் திகழுமொரு சீர்மை பெற்ருன்!
நீலமணிச் சுடர்வானில் நீந்திப், பண்பு
நிறைந்தொளிர ஆட்சிசெயும் கதிரோன் வாழ்க!

வெள்ளிடை முடங்கல்

பெறுநர் : மஹாராஜ ராஜ ஸ்திரி
காமராஜர்
முதல் அமைச்சர்,
கோட்டை, சென்னை.

தருநர்
அருப்பைக்கிழார்
'தென்றல்' சென்னை-6

விருதை தந்த வீஷ்டுமரே! வணக்கம்.

என்னடா இவன் செந்தமிழ் கமழும் தென்றலில், திரு. கனம். என்று, அடைமொழி சேர்க்கும் தென்றலில், மகாராஜ ராஜ ஸ்திரி என்று, ஏதோ அந்தப்புரப் பெண்ணுக்கு அடைமொழி சேர்ப்பதுபோல் சேர்த்து. எழுதி இருக்கிருனே என்று திகைக்கிறீர்களா?

திகைக்க வேண்டாம்! மகா. ரா ரா ஸ்ரீ என்று பெயருக்கு முன்னுல் அடைமொழி சேர்த்து இன்றும் கூட சிலர் எழுது வதை நீங்கள் பாத்திருப்பீர்கள் இல்லையா?

அந்த மகா. ரா. ரா. ஸ்ரீ ஆண்கள் பெயருக்கு சேர்க்கக் கூடாதுதான்! ஆம்; அந்த மகா ரா. ரா, ஸ்ரீ என்பதன் விரிவுதான். இந்த மகாராஜ ராஜ ஸ்திரி! புரிகிறதா?

இதை விரிவாக எழுதச் சோம்பிக் கொண்டுதான் மகா. ரா. ரா ஸ்ரீ என்று சுருக்கி எழுதினுர்கள்—எழுதுகிருர்கள் சிறந்த அடை மொழி என்று கருதிக் கொண்டு!

உங்களுடைய அரசாங்க அறிக்கைகளில் முடங்கல்களில் பெயர்களுக்கு முன்னுல் போடுகிறீர்களே 'ஸ்ரீ' அது. இந்த ஸ்திரி' என்பதன் கூட்டு எழுத்துதான் காமராசரே! புரிந்து கொள்வீரா?

ஒருகாலத்தில் செந்தமிழ்த் 'திரு'வை தெருவில் கிடத்தி விட்டு, இந்த அந்நிய ஸ்திரியை அணைத்துக் கொண்டார்கள் உங்களைப் போன்ற பெரியவர்கள்!

இப்போது தெரிகிறதா? ஸ்ரீ என்னும் கூட்டெழுத்தை, ஸ்திரி என்று விரிக்கும் போது எவ்வளவு அருவருப்பாக-பெண்களுக்கு அடை மொழி இட்டது போல் இருக்கிறது என்று!

பாமரத் தமிழன் ஸ்ரீயில் அடங்கி இருக்கும் ஸ்திரியை அறியாமல் இருக்கிருன்!

படித்த அந்நியன் தமிழைக் கொன்று, தமிழனை வீழ்த்துவதற்காக அவனுடைய ஸ்திரியை தமிழன் தலையில் கட்டி விட்டிருக்கிருன்! எத்தனை அக்கிரமம்!

காமராசரே !

செந்தமிழ்த் திருமகனுகிய நீர் அரியணையில் வீற்றிருக்கிறீர். செந்தமிழ் தழைக்க வழிசெய்வீர் என்ற நம்பிக்கையுடன், திருவை ஆட்சி பீடம் ஏற்றுங்கள். ஸ்ரீயை அடித்து விரட்டுங்கள் என்று, தமிழ் மக்களில் மான முள்ளவர்கள் அத்தனை பேரும் சொல்கிருர்கள்!

அதுமட்டுமா? சென்னை ராஜ்யம் வேண்டாம்' 'தமிழ்நாடு வேண்டும்' என்றும் சொல்கிருர்கள்!

அவர்கள் என்னதான் கதறட்டுமே! நடக்குமா என்னிடம்? என்றிருக்கிறீர்கள் நீங்கள்!

ஆம்: திருவற்ற சென்னை ராஜ்யத்தில் திருவும் தமிழ்நாடும் சேர்ந்து வந்தால், நீங்களும் உங்களுடைய எஜமானர்களும் காதலித்துச் சேர்த்துக் கொண்ட ஸ்ரீயும் சென்னையும் என்னுவது?

நீங்கள் எத்தகைய தமிழ்த்துரோகம் செய்தாலும் உங்களைப் 'பச்சைத்தமிழர்' என்று பாராட்டிச் சீராட்டிப் பக்கபலமாக நிற்கப் பெருமைசால் பெரியார் இருக்கிருர்!

திருவை ஆட்சிபீடம் ஏற்ற வேண்டும் என்று ஒருகாலத்தில் போர்க்கொடி உயர்த்திய பெரியார், இப்போது உங்கள் காதலால் கட்டுண்டு வாய் திறக்காமல் இருக்கிருர்!

இப்படி அவரே இருக்கும் போது, நீங்கள் யாருக்காக அஞ்ச வேண்டும்? எதற்காகக் கவலைப்பட வேண்டும்? ஒன்றுமில்லை!

கடந்த 27-9-60 ம் நாள் பெண்ணுடம் உயர்நிலைப் பள்ளி பழைய மாணவர் சங்க ஆண்டு விழாக் கூட்டத்தில் நீங்கள் கலந்து கொண்டீர்களாம்.

அப்போது அந்தப் பள்ளியின் பழைய தலைமையாசிரியர் ஒருவர், பச்சைத் தமிழரான தங்களை முன்னுல் வைத்துக் கொண்டே சென்னை ராஜ்யம் என்றிருப்பதை தமிழ்நாடு என்று மாற்ற வேண்டும் என்ருராம்!

பத்திரிகையில் இந்தச் சேதியைப் பார்த்ததும் எனக்கே ஆச்சரியமாக இருந்தது.

அந்த ஆசிரியருக்கு எத்தனை துணிச்சல்! ஓய்வு பெருத ஆசிரியராக இருந்தால் இந்நேரம் அடி, அடிவயிற்றில் விழுந்திருக்குமே!

ஓய்வு பெற்றவராகத்தான் இருக்க வேண்டும்! இல்லா விட்டால் அந்த அப்பாவி வாத்தியாருக்கு அத்துணை துணிச்சல் எப்படி வரும்?

விருதை சங்கரலிங்கனுரை விட இந்த ஆசிரியர் என்ன பெரியவர்?

விருதை சங்கரலிங்கமாவது காங்கிரசுக்காரர்! பச்சைத்தமிழர்! எல்லா வகையிலும் உங்களுக்கு சமமானவர்!

அப்பேர்ப்பட்ட அவர், தமிழ்நாடு என்று பெயர் சூட்ட வேண்டி 70 நாள் பட்டினி கிடந்து சாவூருக்குப் பயணமானுர்!

அவரை சாகும் தருணத்திலாவது கண்டு, தமிழ்நாடு என்று பெயர் சூட்ட வேண்டுமா? சூட்டுகிறேன்! கொஞ்சம் காலதாமதமாகும் என்று சொல்லியிருந்தால் போதுமே! அவர் செத்திருக்க மாட்டார்! தமிழ்நாடாவது மண்ணுங்கட்டியாவது என்று பிறகு சொல்லி விட்டால் அவரால் என்ன செய்ய முடியும்?

நேரு, கள்ளச் சந்தையாளரை தூக்கிலிடுவேன் என்று சூளுரைத்து விட்டு, பிறகு அவர்களுடைய கையைத் தூக்கி விட்டுக் கொண்டு திரியவில்லையா? நேருவை யார் என்ன சொல்ல முடிகிறது?

நீங்கள் சங்கரலிங்கனுரை அந்த அளவுகூடப் பொருட்படுத்தவில்லையே?

செத்தால் கழுதை செத்துத் தொலையட்டும் என்றல்லவா இருந்தீர்கள்!

அத்தகைய கருங்கல் நெஞ்சம் படைத்த தங்களிடம் தமிழ்நாடு என்று பெயர் சூட்டவேண்டு மென்று ஒரு வாத்தியார் சொல்லியிருக்கிருரே! என்ன தைரியம்?

அறுபது கோழி தின்ற வெருகு சிறு கோழிக்கு அஞ்சுமா? என்று, விருதுநகர் வட்டாரத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள். அதுபோல, சங்கரலிங்கனுர் சாவுக்கே அஞ்சாத நீங்கள், இந்த வாத்தியாரின் வார்த்தைக்கா மரியாதை தருவீர்கள்?

"சோற்றுப் பிரச்னையைத் தீர்ப்பது தான் இப்போது உள்ள முதல் வேலை! அவசியமில்லாத வேலைகளில் மக்கள் நேரத்தை வீணுக்குகிருர்கள்! படித்தவர்கள் கூட இப்படி நேரத்தை வீணடிக்கிருர்களே!" என்றீர்களாம்.

சரியான போடு போட்டீர்கள்! ஆம்; படித்தவர்கள்! படித்தவர்களுக்கு என்ன தெரியும்? புத்தகப் பூச்சிகள்! நேரத்தின் அருமை அவர்களுக்கு எப்படித் தெரியும்?

சோற்றுப் பிரச்னை! ஆம்; சரியான பதில்! எவனுல் மறுக்க முடியும்? என்றைக்குத் தீர்க்க முடியும்? சரியான ஆளய்யா நீர்!

ஊழிக்காலம் முடியும் வரை எதற்கெடுத்தாலும் இந்த ஒரே பதிலைச் சொல்லிக் கொண்டிருக்கலாம் காமராசரே!

சோற்றுப் பிரச்னை! சோற்றுப் பிரச்னை !!

1947-ல் வடநாட்டானுக்கு ஏகாதிபத்தியம் கிடைத்த பின்பு 16 அவுன்ஸாக இருந்த பங்கீட்டு அரிசி ஆண்டு ஒன்றுக்கு இரண்டு மூன்று அவுன்ஸ் வீதம் குறைந்து 6 அவுன்ஸாகத் தேய்ந்து 1952-ல் காங்கிரசுக் காரர்களின் பரியாயப் பெயர்களில் ஒன்ருக 6 அவுன்சும் சேர்ந்தது!

தெருவில் போகிற வருகிற காங்கிரசுக் காரர்களை 6 அவுன்சு என்னும் 'திருப்பெயர்' சூட்டி அன்புடன் அழைத்தார்கள் மக்கள் !

இந்தத் திருப்பெயர்மேல் ஒருவருக்கும் விருப்பமில்லை ! எத்தகைய பித்தலாட்டம் செய்தாவது இந்த 6 அவன்சு என்னும் திருநாமத்தை ஒழிக்க வேண்டும் என்று அரும்பாடு பட்டார்கள் ! காங்கிரசுக்காரர்கள்.

அதன் விளைவாக 1953 ம் ஆண்டில் உபரியாக ஏற்றுமதி செய்யும் அளவுக்கு உணவு உற்பத்தி ஆகிவிட்டது ! முதலாம் 5 ஆண்டுத் திட்டத்தின் 'பயன்' என்ருர்கள் உங்கள் திருக் கூட்டத்தார் !

பொய் நிலைக்குமா ? மறு ஆண்டு 1954-லேயே உணவுப் பஞ்சம் ! ஏன் ? என்று கேட்டபோது இந்த ஆண்டில் வெள்ளத்தால் விளைச்சல் நாசம் என்ருர்கள் !

மறு ஆண்டு 1955-லும் பஞ்சம் ! ஏன் ? என்றபோது புயலால் உணவு நாசம் என்று சொல்லிவிட்டார்கள் !

அடுத்த 1956-ல் மழையில்லை ! விளைச்சலில்லை ! என்ருர்கள்

இப்படி 8 ஆண்டுகளைப் பித்தலாட்டம் செய்து ஓட்டிய பிறகு 1957-ல் என்ன சொல்லலாம் ? யோசித்தார்கள் திடீர் என்றுமக்கட்பெருக்கம் அதிகமாகி விட்டது எவ்வளவு விளைந்தாலும் போதவில்லை என்றனர்.

1958-ல் மக்கட் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த—செருப்புக்குத் தகுந்த அளவு காலைக் குறைக்க—அரசாங்கம் ஆலோசிக்கிறது என்ருர்கள் !

1959-ல் ஆண்களையும் பெண்களையும் மலடாக்கிக் கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்தார்கள் !

1960-நடப்பு ஆண்டில் மலடாக்கும் பெண்களுக்கு ரு. 30 பரிசு என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது ! ஓட்டுப் போடப் பணம் தரும் திட்டத்தைச் சேர்ந்தது இது !

காமராசரே !

இந்த 14 ஆண்டு அனுபவத்திற்குப் பிறகும் இன்னும் சோற்றுப் பிரச்னை தீர்ப்பதற்கு இருக்கிருேம் என்ருல் எவன் நம்புவான் ? ஒப்புக் கொள்வான் ?

இந்த 14 ஆண்டிலும் ஏற்பட்ட பித்தலாட்டங்களைத் தெரிந்த பிறகும், காங்கிரசு ஆதிக்கம் வலிமையோடு இருக்கிறது என்ருல் எந்தப் பித்தலாட்டத்தையும் தட்டி மடக்க ஆளில்லை என்றுதானே அருத்தம் ?

இந்த 14 ஆண்டு காலத்திலும் வேலையில்லாத் திண்டாட்டத்தாலும் அயல்நாடு போனதாலும் தற்கொலை புரிந்து கொண்டதாலும் மக்கட் தொகையைக் குறைத்திருக்கிறீர்களே தவிர சோற்றுப் பிரச்னையா தீர்த்திருக்கிறீர்கள் ? போதாக் குறைக்கு கரு வழிக்கும் மாபாதகமும் செய்து வருகிறீர்கள்.

இத்தனை கொலை பாதகத்திற்குப் பிறகும் மக்கள் மாட்டுச் சின்னத்திற்கு வாக்களிக்கிருர்கள் என்ருல், குடித்த காபிக்கும் தின்ற பலகாரத்திற்கும் கையில் வாங்கிய இரண்டொரு ருபாய் சில்லறைக்கும் நன்றி மறவாமல் வாக்களிக்கிருர்கள் என்பது தவிர வேறென்ன ?

இத்தனை ஏமாளிகள்—அரசியல் அப்பாவிகள் நிறைந்திருக்கும் நாட்டில், நீங்கள் படித்தவர்களைத் தாழ்வாக மதித்துப் பேசுவதில் தவறென்ன ?

என்ன செய்தாலும் அசைக்க ஆளில்லை என்று தெரிந்த பிறகும் சோற்றுப் பிரச்னையை ஏன் பெரிதாக்கிப் பேசுகிறீர்கள் சுலபமாகத் தீர்க்கலாமே !

இதோ வழி :—

அரசாங்கத்தின் கணக்குப்படி இப்போதுள்ள உற்பத்தி உணவு 90% இருக்கும். மக்களைக் கணக்கெடுத்தால் 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் 50% ஏறக்குறைய இருப்பார்கள் !

இந்த 40 வயதுக்கு மேற்பட்ட 50% பேர்களையும் தீர்த்துக் கட்டிவிட்டால் சோற்றுப் பிரச்னை உடனே தீரும்! இல்லையா ?

— 10-ம் பக்கம் பார்க்க —

மல்லிகைப் பந்தல்

24. காட்டுப் பிள்ளையார் கோவில்

தன் அத்தான் நல்லவரல்ல என்று கேள்விப்பட்ட தங்கத்திற்கு-வருத்தமாயிருந்தது ஆனுல், ராதா தான் கூறிய செய்தியை மீண்டும் உறுதிப்படுத்திப் பேசினுள்.

''ஆம்! முன்னெல்லாம் அவரைப் பார்த்தபோது எனக்கு இந்த எண்ணம் ஏற்படவில்லை. இப்போது அவருடைய தாயாருடன் அவரைச் சேர்த்துப் பார்த்த போதுதான், அவர் இப்படிப் பட்டவராய் இருக்கவேண்டும் என்று தோன்றியது மேலும் ஊரில் ஒருவர் கூட அவரைப்பற்றி நல்லெண்ணத்தோடு பேசவில்லை அவரும் அவர் தாயாரும் ஒரே மாதிரி. அவருடைய தாயார் எவ்வளவு அழகாயிருக்கிருளோ அவ்வளவுகொடிய நெஞ்சினளாக இருக்கிருள். அவள் மகனும் அப்படித்தான். ஆள் பார்க்க அழகாகத்தான் இருகிருர். ஆனுல் கொஞ்சம் கூடப் பண்பாடு என்பதேயில்லை. தாயைப்போல பிள்ளை நூலைப்போல சேலை என்ற சொல் இவர்கள் விஷயத்தில் நூற்றுக்கு நூறு அப்படியே பொருந்தும்'' என்று வெறுப்போடு கூறினுள் ராதா.

தங்கம் அன்று வரவேற்புக்கூடத்தில் சுந்தரேசன் நடந்துகொண்ட முறைகளைத் தன் மனத்தகத்தே கொண்டு வந்து நிறுத்திப் பார்த்தாள். ராதா சொல்வதெல்லாம் உண்மையாக இருக்கும்போலத் தோன்றியது. அடுத்த கணம் அவன் தன்னையே கூர்ந்து நோக்கிக்கொண்டிருந்ததை எண்ணிப் பார்த்தாள். அவன் தன்மீது கொண்டுள்ள பற்று இன்னும் குறையாதிருப்பதுபோல் தோன்றியது. ஊருக்கெல்லாம் அவன் கெட்டவன்! ஆனுல், தனக்கும் அவன் கெட்டவன்தானு? தன்னிடத்தில் நல்லவனுக நடந்து கொள்ளமாட்டாஞ? தன்னுல் அவனுடைய வாழ்விலே ஒரு மாற்றத்தையுண்டுபண்ணமுடியாதா? இவ்வாறு குழம்பிக் கொண்டிருந்தது அவள் நெஞ்சு.

'தங்கம், இந்தத் தோட்டத்தில் எந்த இடத்தில் மல்லிகைக் கொடி கொண்டுவந்து நடப்போகிருய்?'' என்ற கேள்வியைக் கேட்டு இரண்டு பெண்களும் திருப்பிப் பார்த்தார்கள். அந்தக் கேள்வி ஒருபெண்ணின் மென்மையான ஆனுல் தளர்ந்த குரலாயிருந்தது. வந்த பெண்மணியைக் குறித்து, ''இது யார் தங்கம்?'' என்று கேட்டாள் ராதா.

'ஜமீந்தாரிணி பெரியம்மாள்'' என்று தங்கம் சொன்னுள் ஜமீந்தாரிணியம்மாள் அவர்களின் அருகில் வந்து சேர்ந்தாள்.

ஜமீந்தாரிணியம்மாளைக் கண்டதும் இரு பெண்களும் எழுந்து நின்று அவளை வரவேற்று மரியாதை செய்தார்கள். ஜமீந்தாரிணி பெரியம்மாள் அவர்களை மீண்டும் அமரச் சொல்லிவிட்டுத் தானும் புல் தரையின்மீது உட்கார்ந்தாள்.

''தங்கம், இனிமேல் இந்த மாளிகை உனக்குச் சொந்தமாகிவிட்டது. ஆகையால் நீ இங்கேயே ஒரு மல்லிகைப் பந்தல் உண்டாக்கி வைத்துக்கொண்டால்தான், அடிக்கடி பழைய வீட்டு நினைவு வராமல் இருக்கும்!'' என்று பெரியம்மாள் கூறினுள்.

''ஏனம்மா, புதிதாக வைக்கிற இந்த மல்லிகைப் பந்தலைப் பார்த்தவுடன், அந்தப் பழைய மல்லிகைப் பந்தல் ஞாபகம் வந்து பழைய வீட்டு ஞாபகமும் வந்துவிடாதா?'' என்று இடைமறித்துக் கேட்டாள் ராதா.

'இவள் யாரடி? பெரிய குறும்புக்காரியாக இருக்கிருள்?'' என்று பெரியம்மாள் கேட்டாள்.

''என் தோழி ராதா, பக்கத்து வீடு'' என்று அறிமுகப்படுத்தி வைத்தாள் தங்கம்.

''இவளைப் பக்கத்தில் வைத்துக் கொண்டால், வேறு எந்த ஞாபகமுமே வராது போலிருக்கிறதே!'' என்று ஜமீந்தாரிணி பெரியம்மாள் கூறியதும் தங்கம் வாய்விட்டுச் சிரித்துவிட்டாள்.

சிரித்துக் கொண்டிருந்த தங்கம் சட்டென்று அடக்கிக் கொண்டு, ''ஏண்டி ராதா. நீயும் இங்கேயே வந்து இருந்து விடேன்'' என்று கேட்டாள்.

''எத்தனை நாளைக்கு அவள் உன் கூடவே இருக்க முடியும்? அவளுக்குக் கலியாணம் ஆகிக் கணவன் வீட்டுக்குப் போக வேண்டாமா என்ன? என்று ஜமீந்தாரிணியம்மாள் கேட்டாள்.

இதற்கு அந்த இரண்டு பெண்களும் எவ்விதமான பதிலும் அளிக்கவில்லை.

பிறகு அங்கு சிறிது நேரம்வரை அமைதி சூழ்ந்திருந்தது.

அமைதியைக் கலைத்துக் கொண்டு அங்கு வந்த தோட்டக்கார சுப்பையா, ''தங்கம்மா, உங்களைப் பண்டிதரையா கூப்பிடுகிருர்கள்'' என்று சொன்னுன்.

தங்கம் எழுந்து, ஜமீந்தாரிணியம்மாளின் அனுமதியுடன் சுப்பையாவைத் தொடர்ந்து சென்றுள். அதே சமயம், தோட்டத்து மரஞ்செடிகளிடையே சலசலப்பு ஏற்பட்டது யாரோ ஒருவன் குனிந்து ஓடுவது போல் தெரிந்தது. ஜமீந்தாரிணியம்மாள் திகிலடைந்து, 'யாரது? சுப்பையா பார்!'' என்று கத்தியவுடன், சுப்பையா அந்த மனிதனைத் தொடர்ந்து ஓடினுன். ஆனுல், சுப்பையா அவனைச் சரிவர அறிந்து கொள்வதற்குள் அவன் வாசற் கதவு தாண்டி நெடுந்தூரம் ஓடிவிட்டான். சுப்பையா திரும்பவந்து தகவல் சொல்வதற்குள் அவர்கள் எல்லோரும் மாளிகைக்குள் வந்து சேர்ந்து விட்டார்கள்.

தங்கம் அண்ணாமலைப்பண்டிதர்இருந்த அறைக்குச் சென்றுள் அங்கு அண்ணாமலைப் பண்டிதர் மட்டுமேயிருந்தார்.

தங்கம் அவரிடம் அஞ்சி அஞ்சிக் கொண்டே மெல்லச் சென்றுள்.

''தங்கம், வா அம்மா!'' என்று அழைத்த அண்ணாமலைப் பண்டிதரின் வார்த்தைகளில் இதற்கு முன் எப்போதுமே காணப்படாத கனிவு இருந்தது.

அந்தக் கனிவு தங்கத்திற்குப் புதிய மன உணர்ச்சியை—அன்பு கலந்த ஒருவிதமான பற்றுதலை—அவர்பால் ஏற்படுத்தக் கூடிய சக்தியுடையதாயிருந்தது.

தங்கம் வந்தவுடன் அருகில் இருந்த ஆசனத்தில் அமரச் சொல்லிய பண்டிதர், அவளைக் கூர்மையாக உற்று நோக்கியபடி, ''தங்கம், உன் மனம் வருந்தும்படி நான் நடந்திருந்தால் அதை மன்னித்து மறந்துவிடுவாயா!'' என்று கேட்டார்.

உடனே தங்கம் பதறியெழுந்து அவர் காலைப் பிடித்துக்கொண்டு, ''ஐயோ மாமா அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்!'' என்று துயரத்தோடு கூறினுள்.

''தங்கம். நான் எதற்காக உங்களிடம் எல்லாம் உண்மையைச் சொல்லாமல் இருந்தேன் தெரியுமா?'' என்று கேட்டார் பண்டிதர்.

தங்கம் அவர் என்ன சொல்லப் போகிருர் என்பதையே ஆவலுடன் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தாள்.

'தங்கம், நான் என் வாழ்க்கையிலே சுகத்தைக் கண்டதில்லை. அன்புக்கினியவளாகிய ஒரு மனைவியை அடைந்தும் நான் என் ஆசையின் காரணமாக அவளுடன் இன்ப வாழ்க்கை நடத்தாமல் கெடுத்துக் கொண்டேன். பாதகியான ஒருத்தியை இரண்டாவதாக மணப்புரிந்துகொண்டு என் வாழ்க்கையை நச்சுக் குழியில் வீழ்த்திக்கொண்டேன். அந்தக் குழியினின்றும் தப்பி அயல்நாடு சென்றவன், வாழ்க்கையில் ஒரு சுகத்தையும் காணவில்லையென்றுலும், வாழ்க்கையைச் சுகப்படுத்தககூடிய செல்வத்தைச் சேர்த்துக்கொண்டு வந்துவிட்டேன். இனி. இந்தச் செல்வத்தையெல்லாம் நான் அனுபவிக்க முடியாது. ஏனென்ளுல் எனக்குக் காலம் நெருங்கிவிட்டது'' என்று சொல்லிக்கொண்டே வரும்போது, அப்படிச் சொல்லாதீர்கள் மாமா! நீங்கள் பல்லாண்டு வாழ்ந்து சீரும் சிறப்புமாய் இருக்க வேண்டும். அப்போதுதான் நாங்கள் எல்லோரும் ஆனந்தமாக இருப்போம்!'' என்று சொன்னுள் தங்கம்.

''தங்கம், உனக்கு நல்ல மனசு. அதனுல்தான் சாகப் போகிற என்னையும் வாழ்த்துகிருய். இருக்கட்டும் நான் சொல்வதைக் கேள். நான் இன்னும் நெடுநாள் இருக்கப் போவதில்லை. அதற்குமுன் நான் பாடுபட்டுச் சேர்த்த சொத்தெல்லாம், நல்லவர் கையிலே சேர்ந்து அவர்கள் நன்ருக வாழ்வதைப் பார்த்துவிட்டுச் சாக வேண்டும் என்பதுதான் என் ஆசை. அதற்காகத்தான் உன் பெயருக்கு இந்த மாளிகையைக் கிரயம் செய்து கொடுக்க ஏற்பாடு செய்தேன். இனிமேல் பாங்கியில் உள்ள என் பணத்தையெல்லாம் உன் பெயருக்கு மாற்ற வேண்டிய வேலையொன்று பாக்கியிருக்கிறது. அதைச் செய்து முடித்துவிட்டு உனக்கும் ஒரு கலியாணத்தைச் செய்து வைத்துவிட்டால். அப்புறம் நான் நிம்மதியாகச் சாவேன். தங்கம். நான் உன் மாமன் அல்லவா? உனக்குத் தகுந்த மாப்பிள்ளை தேடித்தரவேண்டியது என் பொறுப்பல்லவா? ஏன் தங்கம், நான் சொல்லுகிற மாப்பிள்ளையை நீ கலியாணம் செய்து கொள்வாயா?' என்று கேட்டார் கயிலாயம்.

அவர் என்ன சொல்லப் போகிருர்? யாரையாவது மனத்திற்குள் முடிவு செய்து வைத்துக் கொண்டு தான் பேசுகிருரா என்பது தெரியாமல் தங்கம் திகைத்தாள்.

தங்கத்திற்கு. யாராக இருந்தாலும், தன் விருப்பமில்லாமல் ஒருவருக்குத் தான் கட்டிக் கொடுக்கப் படுவதென்பது பிடிக்கவில்லை. அது பொம்மைக் கலியாணம் என்பது அவள் நினைப்பு. இன்னும்எத்தனையாண்டுகள் ஆனுலும், தனக்குப் பிடித்தமாக உள்ள மாப்பிள்ளையைத் தான் திருமணம் செய்து கொள்வது என்று அவள் உறுதிபூண்டிருந்தாள். ஆனுல், அத்தான் சுந்தரேசனைப் போல். யாரேனும் தன் இதயத்தில் இனி இடம் பெற முடியுமா என்பது அவளுக்குச் சந்தேகமாகவேயிருந்தது. இப்படியெல்லாம் ஓடிக் கொண்டிருந்த மனக்குதிரையின் பின்னுலேயே தங்கத்தின் எண்ணெங்கள் தொடர்ந்துசென்று கொண்டிருந்தன. அதை ஓரளவு யூகித்துணர்ந்த அண்ணாமலைப் பண்டிதர், ''தங்கம். உன்னுடைய மனக் கருத்துக்கு விரோதமாக நான் மாப்பிள்ளை யாரையும் கொண்டுவந்து நிறுத்தி விடுவேன் என்று நீ பயப்பட வேண்டாம். ஆனுல், நான்சாவதற்கு முன்னுல் நீ திருமணம் செய்து கொண்டு நலமாக இருப்பதைப்பார்த்து விட்டுச் சாகவேண்டும் என்பதுதான் என் ஆசை!'' என்று கூறினுர்.

தங்கம் ஒன்றும் பதில் சொல்லாமல் இருந்தாள்.

நாரா நாச்சியப்பன்.

தங்கம். சுந்தரேசனிடம் காதல் கொண்டிருந்தவள் என்பது அண்ணாமலைப் பண்டிதருக்கு ஏற்கனவே தெரியும் ஆகையால், சுந்தரேசனைத் தவிர வேறு யாரையும் மனத்தாலும் நினைப்பதில்லை என்று முடிவு கட்டியிருக்கிறாளோ என்னவோ என்ற எண்ணமும் அவருக்கு ஏற்பட்டது போலிருக்கிறது. அதையும் தெளிவு படுத்திக் கொள்வதற்காக அவர் இந்தக் கேள்வியையும் கேட்டுவைத்தார்.

"தங்கம், திருமணமே வேண்டாம் என்று வைராக்கியம் ஏதாவது வைத்திருக்கிறாயா ?"

அண்ணாமலைப் பண்டிதரின் கேள்வியைக் கேட்டுத் தங்கம் மென்மையாகப் புன்னகை புரிந்தாள்.

அந்த மென்மையான புன்னகையைக் கொண்டே அவளுடைய மனக் கருத்தையும் புரிந்து கொண்ட அண்ணாமலைப் பண்டிதர் தம்சந்தேகம் சரியானதல்ல என்று முடிவு செய்து கொண்டார்.

"தங்கம், அடுத்தவாரம் நாம் சென்னைக்குப் போக வேண்டும். அங்கே போய் ஆகவேண்டிய காரியங்களை முடித்துக் கொண்டு திரும்பி வர ஒரு மாதம் ஆகலாம். ஆதலால் நீ வருகிற வெள்ளிக் கிழமையன்று சென்னைக்குப் புறப்படத் தயாராயிரு!" என்று கூறினார். தங்கம், இதுவரை சென்னைக்குச் சென்றது கிடையாது. இப்போது செல்லவேண்டும் என்று அவர் கூறியதும் அவளுக்கு அது மகிழ்ச்சி தருவதாகவேயிருந்தது ஆனால், தன் தாய் தந்தையாரைப் பிரிந்து ஒருமாதம் வரை எப்படி இருக்க முடியும் என்று அவளுக்கு மலைப்பாயிருந்தது. ஆனால் அண்ணாமலைப் பண்டிதர் தொடர்ந்து சொன்ன சொற்கள் அவளுடைய மலைப்புணர்ச்சியை விலக்கி விட்டன. "மரகதமும் சென்னைக்கு வந்ததில்லை. அவளையும் கூட்டிக் கொண்டு போவோம். உன் தோழி ராதாவும் வேண்டுமானால் வரட்டுமே!" என்றார் கயிலாயம் கடைசியாகச் சொன்ன கருத்து தங்கத்துக்கு நிரம்பப் பிடித்திருந்தது. சென்னையில் புதிதுபுதிதாகத் தான் காணப் போகும் காட்சிகளைப் பற்றிக் கருத்துப் பரிமாறிக் கொள்ள ராதா இருந்தால் எவ்வளவு வசதியாக இருக்கும்!

அதன் பிறகு தங்கம், கயிலாயத்தினிடமிருந்து மீண்டு வந்து மற்றவர்களோடு கலந்துகொண்டாள்.

தங்கம் மகிழ்ச்சி நிறைந்த முகத்தோடு வந்ததைக் கண்ட ராதா, அவள் மாமனிடம் போய் வந்த காரியத்தை அறிந்துகொள்ள ஆவலுடையவள்போல் அவளை நோக்கினாள். தங்கமும் ராதாவைக் கைகாட்டி அழைத்தாள். இருவரும் ஒரு மூலைக்குச் சென்றவுடன், தங்கம் நடந்த விஷயங்களைக் கூறி, ராதாவையும் தன்னுடன் சென்னைக்கு வரும்படி அழைத்தாள்.

ராதா தன் தந்தையிடம் அனுமதி வாங்கிக்கொண்டு வருவதாகக் கூறினாள்.

மறுநாள் காலையில் ராதா, நெய்யூருக்குத் திரும்பிவிட்டாள். ஜமீந்தாரும் ஜமீந்தாரிணியம்மாளும் கூடச் சென்னைக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டார்கள்.

ஜமீந்தார் புறப்படும்போது, "தங்கம், எனக்குப் பிள்ளை குட்டி கிடையாது நீதான் என் மகள்போல். உனக்கு இந்த மாளிகையை இனாமாகவே கொடுக்க வேண்டும் என்று எண்ணினேன். ஆனால், கயிலாயம் விடவில்லை. இருந்தாலும், நீயே என் வாரிசாக இந்த மாளிகையில் இருந்து நலம் பல பெற்று வாழ வாழ்த்துகிறேன்!" என்று உருக்கமாகக் கூறிவிட்டுச் சென்றார்.

மாளிகையில் இருந்த வேலைக்காரர்களில் பல பேரைக் காரியக்காரர் அனுப்பி வைத்துவிட்டார். தேவையான நாலைந்து பேரை மட்டும் வைத்துக்கொள்ள அண்ணாமலைப் பண்டிதரிடம் அனுமதி கேட்டுப் பெற்றுக் கொண்டார். தோட்டக்காரச் சுப்பையா உட்பட ஐந்து வேலைக்காரர்களும், அண்ணாமலைப் பண்டிதர், கந்தசாமி வாத்தியார், மரகத அம்மாள், தங்கம் ஆகியோரும் தான் மாளிகையில் இருந்தார்கள்.

பொழுது மெல்லெனப் போய்க் கொண்டிருந்தது. பெரியவர்கள் ஏதேதோ வேலைகளில் ஈடுபட்டிருந்தார்கள். தங்கத்திற்கு அங்கே பொழுது போவதே கஷ்டமாயிருந்தது. மாலைப் பொழுது வந்ததும் அவள் மாளிகைக்குள் இருக்க முடியாமல் தோட்டப் புறமாக வெளிக்கிளம்பி வந்தாள். அங்குள்ள மரஞ்செடிகளை ஒவ்வொன்றுக் கவனித்து கொண்டே வந்து கடைசியில் புல்தரையில் உட்கார்ந்தாள்.

அப்போது திடீரென்று அவள் முன் வந்து நின்றான் சுந்தரேசன்.

சுந்தரேசன் எங்கிருந்து வந்தான் எப்படி வந்தான் எதற்காக வந்தான் என்பது தெரியாமல் திகைத்துப் போய் அவனை நிமிர்ந்து நோக்கிய தங்கத்தை நோக்கி, "தங்கம், உடனே புறப்படு! சீக்கிரம், சீக்கிரம்! என்றான் சுந்தரேசன்.

"அத்தான், எங்கே புறப்படச் சொல்கிறீர்கள் ? எனக்கொன்றும் புரியவில்லையே!" என்றாள் தங்கம்.

'விளக்கமெல்லாம் சொல்லிக் கொண்டிருக்க நேரமில்லை. எல்லாம் பிறகு சொல்கிறேன். சீக்கிரம் வா என்னோடு!" என்று சொன்ன சுந்தரேசன் தங்கத்தின் பதிலை எதிர் பாராமல் அவள் கையைப் பிடித்து இழுத்தான்.

"என்ன அத்தான் இது? கையை விடுங்கள்!" என்று கதறினாள் தங்கம்.

அடுத்த கணம், தங்கத்தின் வாயை அவன் தனது வலது கையால் மூடியபடி இடது கையால் தோளில் சாய்த்துத் தள்ளிக்கொண்டுசென்றான். தோட்டத்தின் பின் வாசல் கதவு முன்னேற்பாடாகத் திறந்து வைக்கப் பட்டிருந்தது. அதன் வழியாகத் தங்கத்தைத் தள்ளிக்கொண்டு வந்த சுந்தரேசன், அங்கு தயாராகக் காத்துக்கொண்டிருந்த ஜீப் வண்டியில் அவளை ஏற்றினான்.

அவளை ஏற்றி விட்டுவிட்டு அவனும் வண்டியில் ஏறிக்கொண்டவுடன், ஜீப் வண்டியின் ஓட்டும் ஆசனத்தில் உட்கார்ந்திருந்த இன்னொரு மனிதன், வண்டியை ஓட்டிச் சென்றான்.

இதில் ஏதோ சூது இருக்கிறது என்பதை யுணர்ந்த தங்கம், ஓடும் ஜீப்பிலிருந்து குதித்துவிட வேண்டுமென்ற எண்ணத்துடன், திடுதிப்பென்று ஜீப்பின் ஓரத்தை நோக்கி நகர்ந்தாள். ஆனால், சுந்தரேசன் ஏமாந்தவனாக இல்லை. விருட்டென்று தங்கத்தைப் பற்றியிழுத்தான். அந்த வேகத்தில் பின்புறம் சாய்ந்த தங்கத்தின் தலை ஜீப்பின் பின் விளிப்பில் அடிபட்டு அப்படியே அவளை மயக்கமடையச் செய்துவிட்டது.

இது சுந்தரேசனுக்கு வாசியாகப் போய்விட்டது. கவலையில்லாமல் ஜீப் ஊரைக் கடந்துகொண்டிருந்தது.

தங்கம் கண் விழித்துப் பார்த்த போது அவள் ஒரு காட்டுப் பிள்ளையார் கோயிலில் தான் இருப்பதைக் கண்டாள். முதலில் அது ஒரு கோயிலாக மட்டும் தான் தோன்றியது. ஆனால், சுந்தரேசனைப் பார்த்த பிறகு தங்கத்திற்குப் பழைய நினைவுகள் வந்தன. அவள் கோயில் வாசல் வழியாகத் தன் பார்வையை வெளியே செலுத்திய போது ஒரே இருட்டாகத் தெரிந்தது. அப்போது சூரியனும் மேற்றிசையில் சாய்ந்து கொண்டிருந்த படியால், அந்தக் கோயிலைச் சுற்றியுள்ள காடு முழுவதும் மேன்மேலும் இருள் பரவி அது ஒரே பயங்கரப் பிரதேசமாக மாறிக் கொண்டிருந்தது.

கோயிலின் உட்புறத்திலே பிள்ளையார் சன்னிதானத்தில் அக்கினிக் குண்டம் அமைக்கப் பட்டிருந்தது. சுற்றிலும் மாவிலையும் தோரணங்களும் கட்டப் பட்டிருந்தன. தன்னையும் சுந்தரேசனையும் தவிரஅங்கே கோயில் குருக்களும், காரோட்டி வந்த மனிதனும். இன்னும் இரண்டு பேர்வழிகளும் இருப்பதைக் கண்டாள் தங்கம். கோயில் குருக்கள் "ஊம், ஊம்! நாழியாகிறது முகூர்த்த காலம் போய் விடப் போகிறது. அதோ பெண் விழித்து விட்டாள். இங்கே கூட்டிவாருங்கள்!" என்று சுந்தரேசனை நோக்கிக் கூறினார்.

சுந்தரேசன், தன்னுடன் ஜீப்பை ஓட்டிக் கொண்டு வந்த மனிதனை நோக்கி, "சுப்பண்ணா மாலை எடுத்து வந்து விட்டாயா ?" என்று கேட்டான். அவன் ஒரு தாம்பாளத்தில் அழகாகச் சுருட்டி வைக்கப்பட்டிருந்த ரோஜாப் பூ மாலைகளைக் காட்டி இதோ !" என்று எக்களிப்புடன் கூறினான்.

உடனே சுந்தரேசன் தங்கத்தின் பக்கம் திரும்பி, "தங்கம், அந்த மாலையில் ஒன்றை எடுத்துக்கொண்டு பிள்ளையார் சன்னிதானத்திற்கு வா" என்றான்.

தங்கம், அவன் கூறிய மொழிகளைக் கேட்டுத் திகைத்து மயங்கி நின்றாள். அப்போது அவளுடைய மனத்தில் பீதி நிறைந்த பல எண்ணங்கள் ஒன்றன்பின் ஒன்றாக மின்னல்களைப் போல் தோன்றித் தோன்றி மறைந்தன:

'சுந்தரேசன் இவ்வளவு அயோக்கியனா? தன்னைக் கட்டாயத் தாலி கட்டித் திருமணம் செய்துகொள்வதற்காகத்தான் காட்டுக்குத் தூக்கி வந்தானா? ராதா சொன்னபடி, கயிலாய மாமாவின் சொத்தை அபகரிப்பதற்குத் தான், இவன் இப்படித் தனக்குக் கட்டாயத் தாலி கட்ட முயல்கிறான். தன்னை மனைவியாக்கிக்கொண்டு விட்டால், சொத்தெல்லாம் தானாகச் சேர்ந்துவிடும் என்று எண்ணுகிறான் போலிருக்கிறது. இப்படிப்பட்ட தீயவனின் மேல் எனக்குக் காதல் ஏற்பட்டதே!" என்று தன்னைத்தானே நொந்துகொண்டாள் தங்கம்.

தங்கம் சுந்தரேசனைச் சாதாரணத் தீயவன் என்றுதான் எண்ணினாள். ஆனால், அவள் எண்ணியதற்கும் மேற்பட்ட அளவு பொல்லாதவனாக இருந்தான் அந்தத் தீயவன்.

கோயில் குருக்கள் தூபத்தைக் கொளுத்திக்கொண்டே "ஊம், ஊம் நேரமாகிறது!" என்று மறுபடியும் கூவினார்.

சுந்தரேசன் தரதரவென்று தங்கத்தைப் பிள்ளையார் சன்னிதானத்திற்கு இழுத்துக்கொண்டு வந்தான். நல்லவர்கள் நல்ல செயல்களைச் செய்கிறபோது பார்த்துக்கொண்டு கல்லாக வீற்றிருந்த அந்தக் காட்டுப் பிள்ளையார் அந்தத் தீயவன் செய்த காரியங்களையும் பார்த்துக்கொண்டு கல்லாகத் தான் சமைந்திருந்தது.

தங்கத்தை அந்தக் கல்லுப் பிள்ளையாரின் எதிரிலே இழுத்துக்கொண்டு வந்த சுந்தரேசன், 'தங்கம் இப்போதுதான் நல்ல முகூர்த்தம்! எடு மாலையை! சொன்னபடி கேளாவிட்டால் நான் சும்மா பார்த்துக்கொண்டிருக்க மாட்டேன்!" என்று உறுமினான்.

தங்கம், தான் சொல்வதைக் கேட்க மாட்டாள் என்ற எண்ணம் அவனுக்கு முன்னரே ஏற்பட்டிருந்தபடியால், அவன் இந்த வார்த்தைகளைக் கூறும் போது அவன் கண்கள் உருண்டு திரண்டு உறுத்து நோக்கின. அவன் முகம் நன்றாகச் சிவந்து போயிருந்தது.

தங்கம் தன் கையைக்கூட அசைக்கவில்லை. அவள் ஒரே தீர்மானமாக இருந்தாள், செத்தாலும், அவனுக்கு மாலையிடுவதில்லை என்று மனத்தைத் திடப்படுத்திக் கொண்டிருந்தாள்.

சுந்தரேசனுக்குக் கோபம் கோபமாக வந்தது.

"அவள் போடாவிட்டால் போகிறது. அப்பண்ணா எடு அந்த மாலையை" என்று உத்தரவிட்டான் சுந்தரேசன்.

அப்பண்ணா என்பவன் ஒரு மாலையைக் கையில் எடுத்துக் கொண்டு வந்தான்.

"அப்பண்ணா, தாலிக் கயிற்றையும் தயாராக எடுத்துக் கொண்டு வா. மாலையைப் போட்டவுடன் தாலிகட்டி விடலாம்" என்றான் சுந்தரேசன்.

அவ்வாறே அப்பண்ணா மஞ்சள் தாலிக் கயிற்றையும் எடுத்துக் கொண்டு வந்தான்.

"நான் இவளைப் பிடித்துக் கொள்கிறேன். மாலையைப் போட்டுத் தாலியைக் கட்டிவிடு" என்று சுந்தரேசன் கூறினான்.

அப்பண்ணா இருகைகளிலும் மாலையையும் தாலியையும் எடுத்துக் கொண்டு தங்கத்தை நோக்கி நடந்து வந்தான். சுந்தரேசன் பின்னால் நின்றபடி அவளுடைய தோள்கள் இரண்டையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். பூசாரி பிள்ளையாருக்குத் தீபங்காட்டிக் கொண்டிருந்தான்.

"அத்தான் உங்கள் கொடுந்தன்மைக்கு எல்லையே கிடையாதா ?" என்று சோகமயமான தீனக்குரலில் தங்கம் கேட்டாள்.

"கிடையாது! கிடையாது! அப்பண்ணா சீக்கிரம் காரியத்தை முடி!" என்று வெறிபிடித்தவன் போல் கத்தினான் சுந்தரேசன்.

அப்பண்ணா, மாலையைத் தங்கத்தின் கழுத்தில் போடுவதற்காக அவன் தலைக்கு மேலே தூக்கினான்.

தூக்கிய அந்த மாலை விர்ரென்று காற்றில் பறந்து கோயில் வாசலில் போய் விழுந்தது. அதே சமயம், தங்கத்தைப் பிடித்திருந்த சுந்தரேசன் தலையில் பலமான அடியொன்று விழுந்தது. அப்பண்ணாவும், பூசாரியும் மீதியிருந்த இரண்டு பேர்வழிகளும் பேய் பிசாசைக் கண்டவர்கள் போல் அரண்டு கோயில் வாசலை நோக்கித் தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடினார்கள்.

தொடரும்

இதே கிழமை இதே நேரம்

மா. தங்கவேலர்

— முந்திய இதழ்த் தொடர்ச்சி —

அப்போது...

ஒரு நாள் மாலையிலே சுமார் ஆறு மணி இருக்கும் சுகுமார் பரபரப்போடு வந்தான். கையிலே அவன் வழக்கமாகக் கொண்டு வரும் கறுப்பு நிறத் தோல் பை இல்லை. ஏதோ செய்தித் தாளை மடித்து வைத்திருந்தான். அவனைக் கண்டதும் 'டைப்' செய்து கொண்டிருந்த மாலா, தனது கையை உயர்த்தி மகிழ்ச்சியைத் தெரிவித்தாள். 'என்ன மாலா! இன்னும் வேலை முடியவில்லையா?' என்று உபசாரத்துக்குக் கேட்டு விட்டு மேல் மாடிக்குச் சென்றான். மாடியிலிருந்து கீழிறங்கி வந்து கொண்டிருந்தான் மணவாளன். அவனைப் பார்த்ததும் பாராதவனைப் போலப் போய்விட்டான் சுகுமார். கீழிறங்கிச் சென்ற மணவாளன் 'டைப் மெஷின்' மீது நாட்டிய மாடிக்கொண்டிருந்த மாலாவின் விரலின் அழகைக் கண்டு சிரித்துக் கொண்டே தனது அறையினுள்ளே நுழைந்தான் தலை நிமிர்ந்து பார்த்த மாலா. அலட்சியத்தோடு தலையைத் திருப்பிக் கொண்டாள்

அறையிலே நுழைந்த மணவாளன் தேடிய 'பைல்' கிடைத்ததும் அதைத் தூக்கிக்கொண்டு மாடிக்குப் புறப்பட்டான். மேல் மாடியிலிருந்த காளமேகத்தின் அறையருகே அவன் சென்றபோது...'நான் போய் வரட்டுமா. அடுத்த வாரம் இதே கிழமை, இதே நேரம்...தவறாமல் வந்து சேர்கிறேன். கவலைப்பட வேண்டாம்! என்ற சுகுமாரின் குரல் ஒலித்தது. மணவாளன், அறிவிப்பு மணியை அழுத்தினான். பதிலுக்கு கதவருகே

அவர்களுக்குள் இப்படி ஒரு வகைப் பிரிவு ஏற்பட்டுவிட்டதே!...குழம்பிய அந்த நட்பை விளங்கிக்கொள்ள முடியவில்லை மணவாளனால். அவன் நினைத்தபடியே அவர்களுக்குள் ஒரு வகை கசப்பு இருந்து வரத்தான் செய்தது. மாலா எப்போதும்போலத் தான் சுகுமாரோடு பழகி வந்தாள். ஆனால், சுகுமார்தான் அவளிடமிருந்து விலகிப் போக முயன்றான். அகம்பாவத்தையும், ஆடம்பரத்தையும் விரும்பிக் கிடந்த மாலாவுக்காக வருந்தினான் மணவாளன். தனது பாதைக்கு எதிர்த் திசையிலே மட்டுமல்ல...வாழ்க்கையிலும் போகக் கூடாத மாற்றுப் பாதையிலே நடை போடுவதாக நம்பினான் அவன்.

பாதை ஓரமாக சிகரெட்டை புகைத்துத் தள்ளிச் சென்ற அவனது நினைவெல்லாம் சுகுமார், குறிப்பிட்டுச் சொன்ன 'அடுத்த, வாரம்' இதே கிழமை! இதே நேரத்தைச் சுற்றியே ஓடிக்கொண்டிருந்தது.

அடுத்த வாரம் வந்தது!

அதே கிழமையில்...அதே...ஆறு மணியும் வந்தது. வேலைகளையெல்லாம் முடித்துவிட்டு எல்லாரும் புறப்பட்டுச் சென்றிருந்தனர். மணவாளன்மட்டும் இன்னும் அறையிலேயே தங்கி எழுதிக்கொண்டிருந்தான். மாலா...கடைசிக் குறிப்பை 'டைப்' செய்துகொண்டிருந்தாள். வெளியே. வேகமாக வந்த காரை நிறுத்திவிட்டு உள்ளே பாய்ந்தான் சுகுமார். வழக்கமாக அவன் கொண்டு வரும் கறுப்பு நிறத் தோல் பையை கையிலே எடுத்து வந்திருந்



யிருந்த பச்சை நிற மின் விளக்கு எரிந்தது. மணவாளன் கதவைத் திறக்கப் போனான். அவனுக்கு முன்னே உள்ளிருந்து திறந்து கொண்டு சுகுமார் வெளி வந்தான். அவன் சிரித்துக் கொண்டே போனான். காளமேகத்தின் முகமோ கறுப்பேறிக் கிடந்தது. எதையோ எதிர்பார்த்து ஏமாந்தவரைப்போலக் காணப்பட்டார். மின் விசிறி அவரது தலைக்கு மேலே சுழன்றுகொண்டிருந்தும், பருத்த அவரது உடலெங்கும் வியர்த்துக் கொட்டியது, கண்ணுடியைச் சரி செய்துகொண்டே, கொண்டு போன 'பைலை' காளமேகத்தின் முன்னே வைத்தான் மணவாளன். மேசையிலே அதை வைத்ததும். போகும்படி கூறினார் காளமேகம், மணவாளனை.

மணவாளன், கீழிறங்கி வந்து தனது தொப்பியை எடுத்துத்தலையில் மாட்டிக்கொண்டு கம்பெனியை விட்டுப் புறப்பட்டான். அவனுக்குப் பின்னே புறப்பட்ட மாலா, கைப் பையைச் சுழற்றிக்கொண்டே, அவன் போய்க்கொண்டிருந்த பாதைக்கு எதிர்த் திசையிலே நடைபோட்டாள். போகும்போது கூட சுகுமார், மாலாவை அழைத்துச் செல்லாமல் போய்விட்டானே! சில நாளாகவே

தான், மணவாளனின் அறையை அவன் தாண்டியபோது...போகும் அவசரத்திலேயே நின்று நிதானமாகப் பார்த்துச் சென்றான், அந்தப் பார்வை எப்போதையும்விட பயங்கரமாகயிருந்தது, அவசர அவசரமாக மாலாவிடம் திரும்பிப் பார்த்துக் கொண்டே, உயரத் தூக்கிய கையை ஆட்டிக்கொண்டு மாடிப் படிகளிலே தாவிச் சென்றான்.

மாடியிலே...கதவைத் திறந்து வைத்து காத்திருந்தார் காளமேகம். சுகுமாரின் தோல் பையைப் பார்த்ததும்...அவரது முகம் மலர்ந்தது. அறையினுள்ளே நுழைந்த சுகுமார் கதவைச் சாத்திவிட்டு 'சோபா' விலே வந்தமர்ந்தான்.

"இன்று பாதிக்குமேல் முத்திருக்குமா? இல்லை அவ்வளவும் தங்கம் தானா?"

மெதுவாக, ஆனால் கம்பீரமாகக் கேட்டார் காளமேகம்.

"நீங்கள் விரும்பிய அத்தனையுமிருக்கிறது. மூன்று லட்சத்தை முதலிலே எடுங்கள்"

சிரித்துக்கொண்டே, பரபரப்போடு கூறினான் சுகுமார்.

"சுகுமார் பெட்டியைத் திறந்து காட்டு. சரக்கை பார்க்கலாம் முதலில்."

"சரக்கு! எப்போதும் பார்த்தது தானே இல்லை காலிப் பெட்டியைக் காட்டியா உங்களிடம் பணம் வாங்கிவிடப் போகிறேன். முதலில் பணத்தை எடுங்கள்...இதோ பெட்டியைத் திறக்கிறேன்"

"பெட்டியைத் திற சுகுமார் பணம் தர நேரமாகிவிடுமா என்ன?"

"பெட்டியைக் காட்டாமல்...பணம் தரமாட்டீர்கள் அப்படித்தானே?"

"அதுதானே சுகுமார், முறை!"

"என் அவசரத்தை நீங்கள் புரியவில்லையே இதோ திறந்து காட்டுகிறேன். நன்றாகப் பாருங்கள்..."

என்று பேசிக்கொண்டே பெட்டியைத் திறந்து, இரண்டு கைகளையும் பெட்டிக்குள்ளே விட்டு, இடது கையிலும் வலது கையிலுமாக ஏக காலத்தில் இரண்டு கைத்துப்பாக்கிகளை எடுத்தான் சுகுமார் காளமேகம் கைகளை உயரத் தூக்குவதுபோல டிராயரிலே கை வைத்தார்.

'தூக்கு கையை'...என்று மிரட்டி, டிராயரில் கை வைக்காமல் செய்தான் சுகுமார். மேசையிலிருந்த இருட்புப்பெட்டிச் சாவிக்கொத்தை சுட்டிககாட்டி, "எடு சாவியை! நடமுன்னால்! திற பெட்டியை" என்று கட்டளையிட்டான் சுகுமார். அவன் சொன்னபடியே செயதார் காளமேகம். இருப்புப்பெட்டியிலே புதைந்துகிடந்த 'கரன்ஸி' கட்டுகள் வெளியே வந்தன. அத்தோடு கடத்தல் தங்கமும் கட்டி கட்டியாக வெளிவந்தது. கயிற்றிலே சுற்றிக் கட்டப்படடிருந்த முத்துமாலையும் வந்து விழுநதது. எல்லாவற்றையும் எடுத்துப் பெட்டியிலே வைக்கச் சொன்னான் சுகுமார். அப்படியே செய்துகொண்டிருந்தார் காளமேகம் அப்போது...

வெளியிலிருந்து 'அழைப்பு மணி' ஒலித்தது. காளமேகத்தின் மார்புக்கு நேரே துப்பாக்கிகளை நீட்டிக் கொண்டே சிகப்புநிற மின்விளக்கை அழுத்தினான் சுகுமார். சிகப்புவிளக்கு எரிந்ததும், அழைப்புமணி நின்றது. மாடி ஏறிவந்த 'யாரோ' அழைப்பு இல்லாத காரணத்தால் கீழிறங்கிச் செல்லும் ஓசை கேட்டது.

"காளமேகமே! காரியம் முடிந்து விட்டது. இனி இந்தப் பெட்டியை நான் வெளியே கொண்டு போயாக வேண்டும். அடுத்து அழைப்புமணி ஒலிக்கும்போது நான் உமது சோபாவுக்குப் பின்னே உமது முதுகுக்கு இந்த இரண்டு துப்பாக்கிகளையும் குறி வைத்துக்கொண்டு பதுங்கியிருப்பேன். பச்சைவிளக்கை அடிக்க வேண்டும். உள்ளே கதவைத் திறந்துகொண்டு வருபவனிடம், இந்தப்பெட்டியைக் கொண்டுபோய், கீழே காத்திருக்கும் எனது காரிலே வைக்கும்படி கட்டளையிடவேண்டும் என்னைக் காட்டிக்கொடுக்க கொஞ்சம் முயன்றாலும் சுட்டுத் தீர்த்து விடுவேன். முதுகுக்குப் பின்னே ஜோடி துப்பாக்கிகளிருப்பது நினைவிருக்கட்டும். எனது சரக்கை வைத்து இத்தனைநாள் கொள்ளை லாபம் சம்பாதித்தீர்கள் இனி எனக்கு சரக்கு வரும் மார்க்கமில்லை. எனது கூட்டாளிகள் எப்படியோ மறைந்து வருகிறார்கள். இனியும் நான் அந்தச் சரக்கை எதிர்பார்த்து வாழமுடியாது

எனவேதான். இந்த அற்புத முடிவுக்கு வந்தேன். போனதை நினைத்து வருந்தாமல் புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளுங்கள்." என்று கூறிக்கொண்டே கதவின் தாழ்ப்பாளை மட்டும் திறந்து வைத்துவிட்டு வந்து காளமேகத்தின் சோபாவின் பின்னே பதுங்கியிருந்தான் சுகுமார்.

மணி ஒலித்தது சிறிதுநேரத்திலேயே! சுகுமாரின் கட்டளைப்படி பச்சைவிளக்கை அழுத்தினார். கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்தாள் மாலா. உள்ளே சுகுமார் இல்லாததைக் கண்டு திடுக்கிட்டாள் மாலா. அதற்குள் தனக்குத் தெரியாமலே போய்விட்டானோவென்று எண்ணிக் கொண்டிருக்கும்போதே. காளமேகம் கட்டளையிட்டார். மேசையிலிருக்கும், பெட்டியை எடுத்துச் சென்று காரிலே வைக்கும்படி. மாலா பெட்டியைத் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு நடந்தாள்.

மாலா மாடியிலிறங்கிக்கொண்டிருந்தபோது,...

சோபாவோடு சேர்த்துக் காளமேகத்தைக் கயிற்றால் கட்டிவிட்டு பயங்கரமாகச் சிரித்துக்கொண்டே மடமடவென்று மாடிப்படிகளிலே இறங்கிப்போனான் சுகுமார், கால் சட்டைப்பையிலே துப்பாக்கியை மறைத்துக்கொண்டே. காரைத் திறந்து காரின் பின்பகுதியிலே பெட்டியை வைத்துவிட்டு உள்ளே வந்தாள் மாலா. அவளை அவசரமாகத் தாண்டி காரில் பாய்ந்து அமர்ந்தான்.

மாலாவுக்கு ஒரே திகைப்பாகயிருந்தது எங்கிருந்து வந்தான்? ஏன் இப்படிப்போகிறான். என்றுகுழம்பினாள். அதைவிடத்திகைப்பாகவிருந்தது.காரின் பின்பகுதியிலிருந்தசுகுமாருக்கு. உட்கார்ந்ததும் புயலவேகத்திலே காரைக் கிளப்ப வேண்டுமென்று 'டாக்ஸி' டிரைவருக்குக் கட்டளையிட்டு காத்திருக்கச் செய்திருந்தான். கார் இருந்தது. ஆனால், டிரைவரைத்தான் காணவில்லை. பெட்டியின் மீது கை வைத்துக் கொண்டே, பயங்கரமாக காருக்கு வெளியே பார்த்தான் சுகுமார். அந்தத் தலை போகும் அவசரத்தில் டிரைவரைக் காணாது போகவே, காரின் கதவைத் திறந்தான் சுகுமார்.

"எங்கே ஓடப் பார்க்கிறாய் நில் அப்படியே!" என்று கம்பீரமாகக் கூறிக்கொண்டே நீட்டிய துப்பாக்கியோடு முன்னே வந்துகொண்டிருந்தார் இன்ஸ்பெக்டர் சாம்பசிவம். ஒரு கை காரின் கைப்பிடியிலே யிருந்தது.

— 9-ம் பக்கம் பார்க்க —



அடிமைப் பெண்

மலையாளச் சிறுகதை

மூலம் : எம். கோவிந்தன்

தமிழாக்கம் : எஸ். நாகப்பன் பி. ஏ.,

“இதோ தெரிகிறது பார்த்தீர்களா, இதுதான் எங்கள் ஊரிலுள்ள “விஷ்ணுகோவில்” கோவிந்தன் குட்டி கைதூண்டிக் காண்பித்தான். சுற்றுப்புறங்களில் பலதரப்பட்டமரங்களும் காட்டுச்செடிகளும் வளர்ந்து பயங்கரமான ஒரு சூழலை உருவாக்கி விட்டிருந்தன. அந்த காட்டிற்கு நடுவே ஓடுவேய்ந்த சிறு கோவில். அணையப்போகும் ஆதவனின் பொற் கிரணங்களில் அந்த கோவில் ஒளி பெற்றுத் திகழ்ந்தது.

திருநாவாய் கால்வாயில் குளித்துவிட்டு நாங்கள் வந்துகொண்டிருந்தோம். நெடுநாட்களாக குழாய்த் தண்ணீரிலேயே குளித்து அலுத்துப் போன எங்களுக்கு கால்வாயில் நீராடியபோது ஒரு புதிய தெம்பு பிறந்தது. அறுவடை முடிந்த வயல்கள் அழகு காட்ட வரப்பு வழியாக சர்க்கஸ்காரர்களைப்போல நடந்து வருவது ஒருவித மகிழ்ச்சி தந்தது. முதுமையின் எல்லையைத் தொட்டுவிட்ட கிழவர்களின் உடலைப்போல அறுவடை முடிந்த சில வயல் வெளிகள் காட்சி தந்தன. சிற்சில வயல்களை உழ ஆரம்பித்திருந்தனர். மண்ணின் புதிய மணத்தைத் தென்றல் கொண்டுவந்து தந்தது. சற்றுத் தொலைவில் ஒரு முதியவர் இரண்டு கறுத்த மாடுகளை துணையாகக் கொண்டு உழுதுகொண்டிருக்கிறார். அந்த மனிதர் மேழியை அழுத்திய வண்ணமே சென்றுகொண்டிருந்தார். அந்த காட்சியைப் பார்த்தால் மாடுகள் அவரை இழுக்கின்றனவா அல்லது அவர்தான் அந்த மாடுகளை இயக்குகிறாரா என்று சந்தேகம் வந்துவிடும். எப்படியானாலும் அவை அசைகின்றன. அது பரிதாபகரமான ஒரு காட்சியாக இருந்தது.

சிற்றூர்களில் எங்கு பார்த்தாலும் இந்த அவலநிலைதான். பரிதாபகரமான, கவலை நிறைந்த காட்சிகளைத்தான் காணமுடிகிறது. உயிரோட்டமும் உல்லாசமும் ஓடி ஒளிந்துகொண்டு விட்டனபோலும். சிற்றூர்கள் வாழவில்லை; ஏதோ இருக்கிறது. அவ்வளவுதான்.

நடந்து நடந்து நாங்கள் கோவிலுக்கு பக்கத்தில் வந்துவிட்டோம். செடிகள் அடர்ந்து கொடிகள் நிறைந்து காடாகி மாறிவிட்டிருந்த இடத்திற்கு நடுவே விலக்கப்பட்ட ஏதோ ஒரு பொருள்போல காட்சி தந்தது அந்தக் கோவில். புள்ளினங்கள் பறந்து திரிந்து விளையாடிக் கொண்டிருந்தன. “மனிதர்கள் ஏன் இந்த கோவிலை ஒதுக்கி வைத்து விட்டார்கள்” என் சிந்தனை ஓடியது. இல்லையென்றால் இந்த கடவுள்தான் மனிதர்களைக் கவரும் சக்தியற்றவராகிவிட்டாரா? வந்தாரை வாழவைக்கும் திருமாலாயிற்றே அவர்! காத்தல் தொழிலை தனதாக்கிக் கொண்ட கண்ணபிரானின் திருஉருவல்லவா அங்கிருப்பது! உயிரினங்களின் செக்யூரிட்டியே அவரிடம் தானே இருக்கிறது. சிந்தனையை இடைமறித்துக்கொண்டு கோவிந்தன் குட்டி கதை கூற ஆரம்பித்தான் வானவர்களின் கதைபோல ஆபாசம் நிறைந்த காதையல்ல; அனுதாபப்பட வேண்டிய சோகமயமான மனிதனின் கதை! கதையல்ல வரலாறு.

கொஞ்சம் கொஞ்சமாக இந்த உலகம் இரவுப்பெண்ணின் இன்ப அரவணைப்பிலே சிக்கித் தவித்துக் கொண்டிருந்தது. ஒளி உமிழ்ந்து கொண்டிருந்த கோவிலின் கோபுர உச்சிகூட கறுக்க ஆரம்பித்து விட்டது. வயல் வரப்பினூடே அந்த சிற்றூர்ப் பெண்கள் குளித்துவிட்டு போய்க்கொண்டிருந்தனர். அவர்களின் நடையில் வேகம் தென்பட்டது. திருநாவாய் கோயிலின் சங்கநாதம் முழங்கிற்று. அந்த கிராமமே கறுப்புநிறப் போர்வையை இழுத்து மூடிக்கொண்டது போலும்.

எங்களுக்கு மூர்வாங்கரை’க்குன்று வரை போகவேண்டும். இருளடைந்த அந்த சிறுபாதை வழியாக தப்பித்தவறி நடந்துகொண்டிருந்தோம். இதற்கிடையில் உள்ளத்தையே உலுக்குகின்ற ஒரு கதை. அந்த சிறுபாதை வழியாக எத்தனை கதைகள் நடந்து மறைந்ததுவோ?

இருபது வயதுதான் ஆகியிருந்தது மீனாட்சிக்கு. அவ்வளவு அழகி என்று கூறிவிட முடியாது. ஆனால் அவளிடமும் ஒருவித ‘கிராமீயக்கவர்ச்சி’ இருக்கத்தான் செய்தது. உழைப்பவர்கள் குலத்திலே பிறந்தவள் அவள் உழைப்பிலேயே வளர்ந்தவள். அந்த உழைப்பு அவள் உடலுக்கு அழகு தந்தது. அதோடு வலிமையும் சேர்ந்தது. பருவம் தனது பங்கிற்குச் சிறிது எழிலையும் தந்து கூட்டிப் பார்த்து மகிழ்ந்தது.

ஒருதடவை பார்த்துவிட்டால்கூட கேட்பார்கள் “அவள் யார்?” என்று.

அந்தப் பெண் யார்?

அவள் ஓர் அடிமை. இது, அலங்கார வார்த்தையல்ல. அடிமை என்பதற்கு பொருள் அடிமை என்பது தான். சிற்றூர்களில் இப்படிப்பட்ட அடிமைகளை தாராளமாக நீங்கள் பார்க்கலாம். இதற்கு தென்மலபார் நாட்டைப் பற்றி சிறிது தெரிந்து கொள்ளுங்கள்.

தென்மலபார் நாட்டில் வள்ளுவநாடு, பொன்னானி முதலிய தாலுக்காக்களை எடுத்துக்கொண்டால் எவ்வளவு குன்றுகள் தென்படும் தெரியுமா? சிற்றூர்களில் முக்கால் வாசி இந்த குன்றுகளை ஒட்டித்தான் இருக்கும். இந்த மாதிரி இடங்களில் இருவகை குன்றுகளைக் காணலாம். இயற்கையாக எழுந்த குன்றுகள் ஒருவகை, சமுதாய அமைப்பின் அடிப்படைத் தவறுதலால் எழுந்த குன்றுகள் மற்றொரு வகை. மழைக் காலத்தில் இயற்கை யன்னையின் கரங்களென தென்றல் தழுவ, ஆடு மாடுகளை மேய்த்துச் செல்லும் சிறுவர்கள் ஓடியாடித் திரிகின்ற குன்றுகள் முதல் வகையைச் சார்ந்தவை; இரண்டாவது வகைக் குன்றுகளைக் காண வேண்டுமா? அதோ பூதேவர்களின் இல்லங்கள் அவற்றிற்கு நடுவே வானவர்களின் ஆலயங்கள். இவற்றைச் சுற்றிலும் அடியார்களின் குடிசைகள். நமது நாட்டின் பழங்கால முதலாளித்வத்தைப் பார்க்க வேண்டுமா இதோ இங்கே காணலாம். மூச்சுவிடமுடியாத அளவுக்கு உரிமைகள் பறிக்கப்பட்ட மனித ஜீவன்களின் சோக கீதத்தைக் கேளுங்கள். தனி உடமையின் மாண்பினைக் கூறிக்கொண்டே உழைப்பவனை அடிமையாக்கி உன்மத்தர்கள் வாழ்ந்துகொண்டிருந்த பரம்பரையின் அழுக்கு மூட்டையிலிருந்து கிளம்பும் துர்நாற்றம்,

மீனாட்சியின் குடும்பம் பூதேவர்களின் இல்லத்தில் பணிவிடை செய்யும்-செய்து வாழும் அடியார்கள் பரம்பரையைச் சார்ந்தது. அவளது அம்மாவும் பாட்டியும் சகோதரனும் அங்குதான் வேலை பார்த்தார்கள். என்ன வேலை என்று சிந்திக்கிறீர்களா! எல்லா வேலையும்தான். இல்லத்தில் நிறைய அங்கத்தினர்கள் உண்டு; சில சிறு நம்பூதிரிமார்கள் (சின்ன எஜமானர்கள்) தங்கள் வசதிக்காக தனியாக ‘பத்தாயப்புரை’ கட்டிக்கொண்டு வாழ்ந்தார்கள். அதோடு அடிமைகளையும் பங்கிட்டுக்கொண்டனர். மீனாட்சியும் அவ்வாறு பங்கு போடப்பட்ட அடிமைகளில் ஒருத்தியானாள். இல்லத்திற்கு பக்கத்தில்தான் அவளது எஜமானின் பத்தாயப்புரை. அவர் ‘முறைப்படி’ திருமணம் ஆகாதவர். குல வழக்கப்படி ‘சூத்திர’ப் பெண் ஒருத்தியை மணந்திருந்தார். மனைவியைத் தொட்டாலோ அல்லது குழந்தைகளைத் தொட்டாலோ அவர் ‘ஸ்நானம்’ செய்ய வேண்டும். ஆனால் அவர் ஒரு முன்னேற்றவாதியாக இருந்தார். ஆட்கள் அவரை முற்போக்காளன், பொதுநலத் தொண்டன் என்றெல்லாம் புகழ்ந்தனர். குருவாயூர் சத்யாக்கிரகத்தின்போது தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்திருந்தார். இப்பொழுதெல்லாம் அவர் ஒரு ‘உண்மை தேசபக்தரை’ப்போலவே நடந்துகொள்கிறார். சர்வோதயத்திற்காக சதா சர்வ காலமும் பாடுபடுபவர். பெரிய தியாகி என்ற பட்டத்தை தாங்கிக்கொண்டிருந்தார். பெரிய பெரிய காங்கிரஸ் பிரமுகர்கள் விருந்தினர்களாக வந்து போய்க் கொண்டிருக்கின்றனர். மீனாட்சியும் இவரைப்போன்ற ஒரு ‘பெரிய மனிதரின்’ அடிமை” என்ற நினைப்பிலே பெருமை கொண்டாள்.

அப்படியிருக்கும்போதுதான் அந்த நிகழ்ச்சி நடந்தது. ஆம் மீனாட்சி கருவுற்றாள். அந்த சிற்றூர்களில் அடிமைப் பெண்கள் ஆளில்லாமலே ‘கர்ப்பவதி’யாவது ஒரு சாதாரண நிகழ்ச்சிகள். ஆனாலும் அதற்கு யாராவது ஒருவன் காரணமாக இருந்திருக்க வேண்டும். எல்லோரும் ‘அந்த’ மனிதனைத் தெரிந்து வைத்திருந்தார்கள். மீனாட்சி! பாவம்! அவளென்ன குந்திதேவியாகுழந்தை பெறுவதற்கு மந்திரம் கற்று வைத்திருக்க! அவளுடைய கருவில் வளரும் ஜீவன் வாயுதேவனோ சூர்யனோ சந்திரனோ, மற்ற தேவர்களோ அல்ல ஊராருக்கும் அந்த உண்மை தெரியும். ஆனால் வெளியே சொல்ல பயந்தனர். இருக்க இடமும் விவசாயம் செய்ய நிலமும் இல்லாமற் போய்விடுமே என்ற பீதிதான் அது. ஆனால் அதன் விளைவு? மீனாட்சியின மானம் காப்பாற்றப்படவில்லை. கற்பு களங்கப்பட்டுவிட்டது.

மீனாட்சி வேலையிலிருந்து நீக்கப்பட்டுவிட்டாள். நம்பூதிரியின் மனைவி அவளை ‘விரட்டிவிட்டாள்’ என்று கூறுவதுதான் அதைவிடப் பொருத்தம். அவளுடைய கோபம் பணிப்பெண் கருவுற்றாள்என்பதல்ல. அதன் காரணகர்த்தாவையும் அவளுக்குத் தெரியும். அதுதான் அவள் கோபத்தை பலமடங்கு அதிகப்படுத்தியது. “ஆ அவ்வளவு ஆகிவிட்டதா அந்த சிறுக்கிக்கு, உண்ட வீட்டிற்கே இரண்டகம் செய்யும் கள்ளி!” அவள் அலறினாள்.

மீனாட்சி அவள் மானத்தை காப்பாற்றிக்கொண்டாள்.

அன்று இரவோடு இரவாக யாருமறியாமல் அவள், நாடி வந்தோர்க்கு அபயமளிக்கும் திருமால் உறையும் கோவில் நடையில் தூக்கு மாட்டிக் கொண்டாள். கோவிலுக்குள்ளிருந்த ஆண்டவனின் உருவம் இதையெல்லாம் பார்த்துக்கொண்டுதான் இருந்தது. பார்த்துத்தான் பயன் என்ன?

கல்லுக்கு மனிதனைக் காப்பாற்றும் சக்தியுண்டா என்ன?......போலீஸ் வந்தது. புலன் விசாரணை நடந்தது. சவம் புதைக்கப்பட்டது.

இப்போது மீனாட்சியின் ஆவி இந்த கோவிலைச் சுற்றி அலைந்து திரிகிறதாம்.

கதை முடிவதற்குள் நாங்கள் மூர்வாங்கரை குன்றிற்கு வந்துவிட்டோம். நாளை கலைக்கழக மாநாடு மறுநாள் அரசியல் மாநாடு. மின் விளக்கு வரிசையாக ஒளி உமிழ்ந்த வண்ணம் காட்சி தந்தன. பிரதிநிதிகள் நாலாபக்கமிருந்தும் வந்து கொண்டிருந்தனர். எல்லோரும் தங்கள் அலுவல்களில் ஈடுபட்டிருந்தனர்.

யார் அந்த மீனாட்சி? அவள் இறந்து போனால்தான் என்ன? இதைப்போல எத்தனை மீனாட்சிகள் இறந்திருப்பார்கள். யாருக்குத் தெரியும்? இதே கரிய இருட்டில் இதைப்போல தற்கொலைக்கு அடிப்படையான எத்தனை நிகழ்ச்சிகள் நடைபெறுகிறதோ?

முன் பக்கத் தொடர்ச்சி

மற்றொரு கை பெட்டியைப் பிடித்திருந்தது.

அந்த நிலையிலேயே போலீசார் ஓடி வந்து சுகுமாரைப் பிடித்துக் கைகளுக்கு விலங்கிட்டனர்.

“சுகுமார்! உன்னுடைய நாடகம் முடியும் நேரத்தில் வந்துவிட்டேன் பார்த்தாயா. அன்றொரு நாள்உன்னை சந்தேகப்பட்டுத் தொடர்ந்தேன். நீயோ என்னை உன் வலையில் சிக்க வைத்துவிட்டதாக நம்பியிருந்தாய். உனது பழக்கத்தால்...பல முறை கரன்ஸிக் கட்டைத் தந்திருக்கிறாய். அதெல்லாம் பத்திரமாக நாளை கோர்ட்டுக்கு வரும் பயப்படாதே. இதைவிட, எல்லாருக்கும் உபயோகமான ஒரு காரியத்துக்கு உனது நட்பு பயன்பட்டிருக்கிறது. உனது கூட்டுத் தோழர்களான கள்ளக் கடத்தல் ஆசாமிகளை நாங்கள் பிடிக்க நீ தெரிந்தோ தெரியாமலோ உதவியிருக்கிறாய். அதன் கடைசிக் கட்டமாக - நிகழ்ச்சியாக- இன்று இந்த நாடகத்தை ஆடியிருக்கிறாய். ஒரு வாரமாகவே இந்தத் திட்டமிடுவதை நான் அறிவேன். ஆனாலும், என்னைக்கூட சில மணி நேரம் ஏமாற்றிவிட்டாய் இருந்தாலும், சிக்க வேண்டிய முறையோடு சிக்கிக் கொண்டாய்”

இன்ஸ்பெக்டர் சாம்பசிவம் பேசிக் கொண்டே கம்பெனியினுள்ளே நடந்தார். போலீசார் இருவர் மாடிக்கு ஓடிச் சென்று காளமேகத்தை விடுவித்துக் கீழே கொண்டு வந்தனர்.

“மிஸ்டர் காளமேகம்! கள்ளக் கடத்தல் சம்பந்தமாக உங்களையும் கைது செய்கிறேன்” என்றார் இன்ஸ்பெக்டர் அதிர்ச்சியடைந்து சிலையாக நின்றார் காளமேகம். ஒதுங்கி நின்ற மாலா தலை தாழ்த்தி நின்றாள். அறையை விட்டு வெளியே வந்த மணவாளன், மாலாவை அமைதியாக நிமிர்ந்து பார்த்தான். அந்தப் பார்வையின் குளுமையைத் தாங்கமுடியாத மாலா தலை தாழ்த்திக்கொண்டாள்.

செய்திச் சுழல்

வெறி நாய்களை இங்கே நுழைய விட மாட்டோம் !

டாக்டர் ராம்மனேகர் லோகியா சோஷலிஸ்டுக் கட்சியின் தலைவர். அவர் இரண்டு மாதங்களுக்குமுன் சென்னை வந்தபோது, இங்கு சில ஊர்களில் பொதுக்கூட்டங்களில் இந்தியில் பேசினார். இது தமிழ்நாடு,-தமிழர்களுக்குப் புரியாத இந்தியில் பேசாதீர்'' என்று அவரைப் பேச விடாமல் தடுத்தனர். மக்கள். அதற்கு அப்போது இருந்த ஆத்திரத்தில், இந்திதான் இந்தியாவின் ஆட்சி மொழி, அதில்தான் பேசுவேன்என்று ஆணவத்தோடு பதிலளித்தார். சூடு பட்டும் சொரணையில்லாமல் பேசுகிறார் என்று தமிழ்மக்கள் பேசாதிருந்தனர். இப்போது இரண்டு மாதத்திற்குப் பிறகு மறுபடியும் லோகியா கதறத் தொடங்கியிருக்கிறார்.

''நான் என்னுடைய தாய்மொழியில் பேசுவதா மொழிவெறி?''என்று கேட்டிருக்கிறார் லோகியா.

இரண்டு மாதங்களுக்குமன் லோகியா, தான் தன் தாய்மொழியில் பேசுவதாகக் கூறியிருந்தால், அவருடைய தாய்மொழிப் பற்றை நாம் போற்றியிருக்க முடியும். ஆனால், அப்போது, இந்திதான் ஆட்சிமொழி; அந்த இந்தியில்தான் பேசுவேன் என்று ஆணவமாகப் பேசிய லோகியா இன்று தாம் வெறியர் அல்ல தாய்மொழிப் பற்றுடையவர் என்று காட்டிக்கொள்ள முன் வருகிறார் இதை நம்புவதற்கு இங்கு யாரும் ஏமாந்தவர்கள் இல்லை.

லோகியாவுக்கு உண்மையில் வெறியில்லையென்றால், அவர் என்ன செய்திருக்க வேண்டும்? அவருக்கு ஆங்கிலம் தெரியும். இங்குள்ள பலருக்கும் ஆங்கிலம் தெரியும். தமது கருத்துக்களைத் தமிழ்நாட்டுக்குத் தெரிவிக்க விரும்பிய லோகியா. இருசாராருக்கும் தெரிந்த ஒரு பொது மொழியான ஆங்கிலத்தில் பேசியிருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால், அவரை கண்ணியமான நோக்கங்கொண்ட பெரிய மனிதராக நாம் மதித்திருப்போம். இல்லை, ஆங்கிலம் அயல்நாட்டு மொழி, அதில் பேசமாட்டேன் என்ற பிடிவாதக் கொள்கையுடையவரானால், தமிழ் நாட்டில் தமிழ் கற்றுக்கொண்ட பிறகுதான் நுழையவேண்டும். ஆட்சி மொழி இந்தி-உங்களை ஆளப்பிறந்தவர்கள் நாங்கள் என்று திமிர்வாதம் பேசிக்கொண்டு வந்தால், தமிழர்கள் சும்மா விடமாட்டார்கள் என்பதை லோகியா இனிமேலாவது தெரிந்து கொள்ளட்டும்.

இந்த சோஷலிஸ்டுக் கட்சியினர் எப்படிப்பட்ட இந்தி வெறியர்கள் என்பது நமக்குத தெரியாததல்ல. குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத், தமிழ்நாட்டில் இந்தியில் பேசாதது தவறு என்று குறைகூறித் தீர்மானம் நிறைவேற்றிய வெறியர்களின் கூடாரம் சோஷலிஸ்டு கட்சி என்பது நமக்கு நன்ருகத் தெரியும். ஆகவே எச்சரிக்கிறோம், வெறிநாய்களைத் தமிழகத்தில் நுழைய விடமாட்டோம் என்று. லோகியா உணர்வாராக!

இராசேந்திரரே ! வெந்த புண்ணிலே வேல் செருகாதீர்.

புதுடில்லியில் ஆண்டுதோறும் ராமலீலா கொண்டாடுகின்ருர்கள். இந்தக் கொண்டாட்டங்களின் இறுதி நாளில். ஒவ்வோர் ஆண்டும் இராவணனைக் கொளுத்துவதுவழக்கமாக நடந்துவருகிறது. இராமா இராவண யுத்தம் நடத்துவதும், கடைசியில் இராவணன்,மேகநாதன், கும்பகர்ணன் ஆகியோரின் உருவங்களைத் தீயிட்டுக் கொளுத்துவதும், இதைக் கண்டு வடநாட்டார் ஆனந்தங் கொண்டாடுவதும்தான் இந்தத் திருநாளில் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகள்.

இந்த நிகழ்ச்சியைப் பற்றிக் கேள்விப்பட்டால் திராவிடமக்களின் இதயமெல்லாம் எரியும் என்பதை அவர்கள் நினைத்துப் பார்ப்பதில்லை. இராவணன், கும்பக்கருணன்போன்றவர்கள் திராவிட மக்களின் இதயத்திலே வாழும் இலட்சிய வீரர்கள்! அவர்களைக் கொளுத்துவதைஅறிந்து திராவிடர்களின் இதயமெல்லாம் புண்ணுகிறது என்பதை சாதாரண வடநாட்டார் அறியவில்லையென்ருலும், ஜனதிபதி இராசேந்திர பிரசாத்தாவது உணரவேண்டும். ஆனால், ஜனதிபதி இராஜேந்திர பிரசாத் இதை உணர்ந்து ஒதுங்கியவராகத் தெரியவில்லை. அவரே இந்த விழாவுக்கு வந்து இராமன், இலட்சுமணன், அனுமான் வேடங்கள் போட்டவர்களுக்கு நெற்றியில் திலகமிட்டு ஆசீர்வதித்துப் போருக்கு அனுப்பியிருக்கிறார் இராவணன் முதலியவர்களின உருவங்கள் எரிக்கப்பட்டதைப் பார்த்துப் பரவசப்பட்டிருக்கிறார். இந்த இழிசெயலுக்குப் பக்கத்துணையாக - உலகம் புகழும் தத்துவ மேதையும் குடியரசின் உதவித் தலைவருமான டாக்டர் இராதாகிருஷ்ணனும் இருந்திருக்கிறார் என்ற செய்தி கேட்கும்போது எரிகிற புண்ணில் ஊசி குத்தியது போல் இருக்கிறது.

ஒரு சாராரை இழிவுபடுத்தி நடத்தப்படுகின்ற இதுபோன்ற கொண்டாட்டங்களில், ஒரு குடியரசுத் தலைவர் கலந்துகொள்வாரானல், அவரை - இழிவுக்காளாகும் இனத்தினர் எவ்வாறு ஏற்றுக்கொள்வார்கள்? இதைக் குடியரசுத்தலைவரும் வடக்கு தெற்குப் பாகுபாடு வேண்டாம் என்கிறவர்களும்எப்போதுதான் சிந்தித்துப் பார்ப்பது? எப்போது தான் சீதிருந்துவது?

தென்றல் முல்லை இரண்டுக்கும்

கீழ்க்கண்ட ஊர்களுக்கு முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர் தேவை :—

மானுமதுரை	பாலக்காடு
காரியாபட்டணம்	சிங்கநல்லூர்
சோளிங்கபுரம்	தங்கச்சிமடம்
மகாபலிபுரம்	கன்னமங்கலம்
திருத்தணி	சுங்குவார்சத்திரம்

விவரங்கட்கு

தென்றல் : சென்னை-6

வெள்ளிடை முடங்கல்

5-ம் பக்கத் தொடர்ச்சி

இதில் சிரமம் ஒன்றுமில்லை. நகராட்சி மன்றங்களில் நாய்களை ஒழிப்பதற்கு ஒரு மின்சாரப் பெட்டி வைத்திருக்கிறார்கள் அல்லவா?

அந்தக் கருவியை ஏராளமாக வாங்கி ஊராட்சி மன்றம் நகராட்சி மன்றம் தாசில்தார் அலுவலகம் கலக்டர் அலுவலகம் ஆகிய எல்லா இடங்களிலும் நிறுவவேண்டும்.

அதன் பிறகு அடியிற்கண்ட மாதிரி டில்லி மூலம் அரசாங்க அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டும்!

1—1—1961

New Delhi

On India govenment Service

Notice to All Rice Eaters.

கடந்த 14 ஆண்டு காலமாக உணவுப் பிரச்னையுடன் போராடி அரசாங்கம் வெற்றி கண்டிருக்கிறது. ஆனால், அந்த வெற்றி பரிபூரணமானதாக இல்லை. காரணம்: மக்கட் பெருக்கமே. அரசாங்கம் ஏற்படுத்திய 5 ஆண்டுத்திட்டங்களால் கிடைத்த உணவுப் பெருக்கத்தை விட மக்கட் பெருக்கம் பலமடங்காகி இருப்பதால் உணவுப் பிரச்னை ஒழிந்த பாடாக இல்லை,

மக்களை மலடாக்கும் திட்டம் வெற்றிகரமாக இருக்கிறது. ஆனாலும் அந்தத் திட்டம் சராசரி நிலைமையை உயரவொட்டாமல் தடுக்க உதவுமே தவிர ஏற்கனவே, உச்ச வரம்பைக் கடந்து நிற்கும் மக்கட் பெருக்கத்தைக் குறைக்க உதவாது. எனவே, மலடாக்கும் திட்டத்தினல் உணவுப் பிரச்னையில் பூரண வெற்றிகாண முடியாதென்று அரசாங்கம் கருதுகிறது.

உணவுப் பிரச்னையில் உண்மையான வெற்றிகாண வேண்டுமானல், பொது மக்களின் சர்வபரித்தியாக ஒத்துழைப்பு தேவைப்படுகிறது.

அத்தகைய ஒத்துழைப்பைக் கோரி அரசாங்கம் புதிய திட்டம் ஒன்றை பொது மக்களிடம் கொண்டு வருகிறது. என்னவென்ருல் :—

மொத்த மக்கள் தொகையில பாதிக்குமேல் 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் இருக்கிருர்கள். 40 வயதுக்கு மேற்பட்டவர்கள், உலக வாழ்வில் எல்லாவற்றையும் ஆண்டு அனுவித்தவர்களாகவே இருக்க முடியும்.

இத்தனை வயதுக்குமேல் கண் பஞ்சடைந்து காது மந்தமாகி நடை தளர்ந்து கூன் விழுந்து நடைப்பிணம் போல் இருப்பதைவிட, இவர்கள் பின் சந்ததியாரின் நல்வாழ்வுக்காக—அரசாங்கத்தின் உணவுப் பிரச்னை வெற்றிக்காக—உயிர் வாழ்வை முடித்துக் கொள்ளுமாறு அரசரங்கம் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறது.

உயிர் போக்குவதற்கு எளிதாக—அரசாங்கம் ஆங்காங்கு மின்சாரக் கருவிகளை நிறுவியிருக்கிறது.

40 வயதுக்கு மேற்பட்ட ஆண் பெண் எவரும் சந்தோஷமாக உயிரைப் போக்கிக் கொள்ளலாம்.

அவ்வாறு உயிர்த்தியாகம் செய்ய முன்வரும் ஒவ்வொருவருக்கும் ரு. 250 புதிய நோட்டுகளாக அரசாங்கத்தின் அன்பளிப்பாக வழங்கப்படும்.

அந்த நோட்டுகள் அரசாங்க அச்சகங்களில் அச்சிடப் பட்டவையாக இருக்கும் என்பதற்கு உத்தரவாதம் உண்டு. தனியார் குடிசைத் தொழிலாக அச்சடிக்கும் நோட்டுகள் அல்ல.

தி. மு. க, கம்யூனிஸ்டு போன்ற எதிர்க் கட்சியினர் ஜனநாயக முறைகளை நீண்ட காலமாக வற்புறுத்தி வருவதுடன் அரசாங்கத்தில் அவர்களைப் பொருட்படுத்தவில்லையே என்று குறை கூறியும் வந்திருக்கிருர்கள்.

ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள எதிர்க் கட்சியினர் அனைவரும் தாமாகவே முன் வந்து இந்த உயிர் முடிப்புத் திட்டத்தில் பங்கு கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் ஆவலுடன் எதிர்பார்க்கிறது.

அப்படி முன்வருகிற எதிர்க் கட்சியினருக்கு முதன்மையும் பெருமையும் தரப்படும்,

இந்தத் திட்டத்தை எதிர்ப்பவர்கள்-இழிவுபடுத்திப் பேசுபவர்கள் எந்த வயதினராக இருந்தாலும் யாராக இருந்தாலும் கட்டாய உயிர் முடிப்புக்கு ஆளாக்கப்படுவார்கள்.

இந்த உயிர்த்தியாகம் செய்பவர்கள் நல்ல கதி சேர்வதற்காக அவரவர் மதாசார முறைப்படி ஈமக்கிரியை பிதிர்க்கடன் ஆகியன செய்யும் பொறுப்பையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும். உயிராசை கொண்ட 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் எங்கே ஒளிந்தாலும் தேடிப்பிடித்து கட்டாய உயிர்த் தியாகம் செய்விக்கப்படுவர்.

40 வயதுக்கு மேற்பட்டவர்கள் காங்கிரசுக் காரராக இருந்தால் அவருடைய உயிர்த் தியாக சம்பந்தம் அத்தனையும் இந்திய ஜனதிபதியின் முடிவுக்குட்பட்டதாகும்.

ஏனென்ருல் காங்கிரசுக்காரர்களில் நாட்டின் விடுதலைக்காக - சுயராஜ்யத்திற்காக - பாடுபட்டவர்களும் இருக்கிருர்கள்.

அத்தகையவர் சேவை நாட்டுக்குத் தேவை ஆதலால் அவர்களைப் பொறுத்தமட்டில் தனியாக ஆராய வேண்டியதாக இருக்கிறது.

காமராசரே!

இந்தத் திட்டத்தை அமுல் செய்து பாருங்கள் உணவுப் பிரச்னை மட்டுமல்ல—எதிர்க்கட்சிப் பிரச்னையும் சேர்ந்தே தீர்ந்து விடும்.

பொது மக்களைப் பற்றி கவலையே வேண்டாம் ரு 250/ புது நோட்டு என்ருல் நான் நீ என்று முந்துவார்கள். தேர்தலின் போது கண்ட அனுபவம். உங்களுக்கு தெரியாதா என்ன? பொது மக்களுக்கு வாழ்வைப்பற்றிய அறிவிருந்தால் காங்கிரசு இத்தனை காலம் ஆட்சி செய்ய முடியுமா? ஒருக்காலும் முடியாது! இதை உங்கள் மனத்துக்குள் வைத்துக்கொள்ளுங்கள். ★

இலக்கியச் சுவை

ருக்மணி இராமநாதன், பி.எஸ்சி.

9. அவலச் சுவை

இலக்கிய உலகம் தரும் சுவைகள் இரண்டு என்று குறுக்கிக் கூறலாம். ஒன்று: இன்பம் பிறிதொன்று துன்பம். இரண்டின் கூறுகளில் ஏனைய சுவைகள் அடங்கும் இயல் பின. துன்பச்சுவையை அவலச்சுவை என்றும் கூறுவர்.

உலகியல் வாழ்வில் ஒவ்வொருவரும் விரும்பிப் பெற நினைக்கும் சுவை ஒன்றே ஒன்றுதான், இன்பச் சுவை இன்பத்தின் அளவு தெரிய வேண்டுமே என்று துன்பச்சுவையை நாடுவோர் இலர் ஆனால் இலக்கிய உலகமோ வேறுபட்டது மட்டுமன்றி வியப்பானதுமாகும். இன்பச் சுவையை நாடிய இலக்கியங்கள் இதயத்தில் இடம் பெறுவதில்லை! துன்பச்சுழலில் தோய்ந்த கோவலன்-கண்ணகி அம்பிகாபதி, அமராவதி, லைலா-மஜ்னு. அனார்கலி மக்களின் இதயங்களில் மாறாது மங்காது ஒளிர் கின்றன. காரணம் என்ன? இலக்கியம் காட்டும் இன்பமுடிவைவிட, துன்ப முடிவே இதயத்தை ஈர்த்திழுக்கவும் - நிலைபெறவும் முடிகின்றது.

இளங்கோ அடிகள் சிலப்பதிகாரத்தின் கருவான சுவை அவலச் சுவையே என்பதை அறிவார். தமிழகம் துன்பமுடிவை விரும்புவதில்லை என்பதால் போலும்-இறுதியில் காதலரை மனத்தே ஒன்றுபடுத்தி மகிழ்கிறார் அடிகள் சிலம்பினைத் தொடங்கும்போதே அவலச்சுவையினைக் குறிப்பாக ஓடவிடுகிறார்.

"மாநகர்க் கீந்தார் மணம்"

(ம. வாழ்த்து)

கோவலன் கண்ணகி திருமணம் பயன் இருவருக்கு தானே என்றால், இருவருக்கும் பயனில்லை, புகார் நகர்க்குச் சிறப்பு என்று கூறுவது போல் தொடங்குகிறார். அதுதான் நடக்கப்போகின்றது என்பதை அறிந்தவராதலால் அவலமாகவே தொடங்குகிறார்.

மணமான மக்களை மதிப்புடையோர் மூதியோர் வாழ்த்துதல் இயல்பு, 'பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வாய்' என்று கூறுவதுண்டு. கோவலன் - கண்ணகியை வாழ்த்துவோர் 'உங்களில் ஒருவரும் இணைந்தமை பிரியாது வாழ்வீர்' என்று எதிர் மறையால் பிரியப் போகிறீர்களே! என்று அவலமாய் அழுகின்றார் அடிகள்: "காதலர் பிரியாமல் கவவுக்கை நெகிழாமல் தீதறுக."

மணந்துகொண்டவுன் மனையற வாழ்வு தொடங்குகிறது. கோவலன் கண்ணகியைப் பலபட பாராட்டிக் கூறிப் புகழ்கிறான். கண்ணகியோ புன்முறுவல் தவிர புகன்றது ஒன்றுமில்லை. வாழ்ந்த வாழ்வின் வழியிடை ஆடலழகி மாதவி நுழைந்து கோவலனைப் பிரித்து இன்பம் பெற்றாள். பெற்ற இன்பம் மணிமேகலையாய் மாறியதே ஒழிய, கோவலனைப் பிரியச் செய்தது. இங்கும் அவலம் தான்!

மகப்பேறு பெற்ற கோவலன் மாதவியை மறந்து மனையகம் வந்தான். வந்தவன் கண்ணகி தந்த காற்சிலம்புகளோடு அவளையும் அழைத்துக்கொண்டு மதுரைக்குப் புறப்பட்டான் சிலம்பினை விற்றுச் சிறப்பெய்தலாம் என்றெண்ணிக் காவுந்தி துணையோடு மதுரைக்குப் புறத்தே அடைக்கலப்படுத்தப்பட்ட பிறகுதான் கோவலன் - கண்ணகி மனையறமே தொடங்கிறது எனலாம். திருமணம் முடிந்து உடன்கூறாது அடிகள் கொலைக்களக் காதையில் கூறியதன் காரணம் இதுதான். காப்பியத்தலைவன் மாசுமருவற்ற ஏந்தல் என்பதைக்காட்டவும்-பிரிந்து பட்ட உள்ளங்கள் இறுகப் பிணைந்து விட்டன என்பதைக் காட்டவும்தான். இந்த நிலையில் கோவலன் இறந்து பட்டால் படிக்கும் மக்கள் துடித்து அழுவர் என்பதே! அவலச்சுவையின் அடித்தளமே அதுதான்.

கோவலன் உணவு உண்ணப் போகிறான். கண்ணகி தன் கையாற் சமைத்த உணவு இதுவரையில் சமையலே அறியாதவள் விரும்பிச் சமைத்த உணவு. மணமாகித்துய்த்த இன்பத்தின் தொய்வு நீங்கிய நிலை. கோவலன் கண்ணகியின் அன்பின் எல்லையில் நிற்கின்ற நிலை. 'அடிகளே அமுதுண்ண வாரீர்' என்று அழைத்து உணவிட குருத்து வாழைஇலையைக் கழுவுகிறான்.

கவிஞர் அவலச்சுவையை எப்படிப் புகுத்துவது என்பதை அறிந்தவர். கண்ணகியின் இன்பநிலை இன்னும் சிறிது நேரத்தில் துன்பச்சூழலில் சிக்கித் தவிக்கப்போவதை இவ்வாறு குறிக்கிறார்.

'மண்ணக மடந்தையை
  மயக்கொழிப் பனள்போல்
தண்ணீர் தெளித்துத்
  தன்கையால் தடவி
குமரி வாழையின்
  குருத்தகம் விரித்திங்கு
அமுத முண்க
  அடிகள் ஈங்கென."

கோவலன் கொலைப்படப் போகிறானே! என்று மண்மகள் வருந்தி மயங்கிய காலை, கண்ணகி தெளித்த நீரால் மயக்கம் நீங்கியதாம். எவ்வளவு அழகுற அவலம் காட்டப்படுகிறது.

மணம் முடித்துப் பெற்ற இன்பம் இல்லையாயிற்று. மதுரைக்குப் புறப்பட்டு கோவலனைக் கண்டு கண்ணகி இனி 'இன்பமே' என்று மதுரைக்குப் புறப்பட்டாள். கோவலனும் கண்ணகியிடம் தன் குற்றங்களைக் கூறி மன்னிப்பும் பெறுகிறான். பெறுவதோடு தன்னருமை மனைவியை.

"பொன்னே கொடியே
  புனைபூங் கோதாய்
கற்பின் கொழுந்தே
  பொற்பின் செல்வி."

என்று பாராட்டுகிறான்.: பாராட்டி மகிழ்ந்த பேராளன் தன்னருங் காதலியைத் தழுவி மகிழ்கிறான்.

சிலம்பில் கொலைச்களக் காதை வரையில் கோவலன்-கண்ணகியைக் கட்டித் தழுவி கரையிலா இன்பம் பெற்றதைக் குறிக்காத அடிகள் இங்குக் குறிக்கிறார்.

"கருங்கயல் நெடுங்கட்
  காதலி தன்னை
ஒருங்குடன் தழீஇ
  யுழையோ ரில்லா"

என்று பிரிந்திருந்த காதலர் இணைந்துவிட்டமையின் பிணைப்பை அடிகள் விளக்குகிறார்.

மாதவியால் தவிக்கவிட்டேனே என்று கண்ணகிக்காக வருந்தும் கோவலன் அவளைப் பிரிந்து மதுரை நகரில் சிலம்பு விற்கப் போக வேண்டுமே! என்று வருந்துகிறான். துடிக்கிறான் - கண்ணகியைப் பிரிவதா? என்று கண்ணீர் வடிக்கிறான்.

"ஒருதனி கண்டுதன்
  உள்ளகம் வெதும்பி
வருபனி கரந்த
  கண்ண னாகி"

என்ற அடிகள் கோவலனின் இளகிய பாசத்தைக் காட்டுகிறது.

இத்தகைய பிணைப்பால் இணைந்த கோவலன் சிலம்பு விற்க மதுரை சென்று காவலன் ஏவலால், கள்வன் என்றெண்ணிக் கல்லாக்கட்குடியன் ஒருவனால் வெட்டப்படுகிறான். இங்கும் மண்மகள் வருந்துகிறாள்.

"மண்ணக மடந்தை
  வான்துயர் கூரக்
காவலன் செங்கோல்
  வளைய வீழ்ந்தான்
    கோவலன்"

என்கிறார் அடிகள்.

வெட்டுண்ட வேதனையை விட கட்டுண்ட நிலையிற் கண்ணகியைக் காட்டுகிறார் அடிகள். காலையிற் தலையிற் பூச் சூடி, மாலையிலே வருவேன் என்று உறுதி கூறிச் சிலம்பினை விற்கச் சென்றவன். மாலையிலே மார்பிலே குருதி வழிய மண்படிய தரையிலே விழுந்து கிடப்பான் என்று எந்தத் தலைவியும் கருதாளே!

'மலையிடைப் பிறவா மணியே, அலையிடைப் பிறவா அமுதே' என்று அமிழ்து ஒழுகப் பாராட்டிய கோவலனைக் கண்ணகிகண்டாள். கொலைக் களத்தில் அரசு கட்டில் ஏறியிருக்கும் கோவலன் அவளோடு கனிமொழி கூறிக் களிக்கவில்லை என்று கூறாமல், "கண்ணகி கண்டாள் கணவனை; ஆனால் கோவலன் கண்ணகியைக் காணவில்லை" என்கிறார் அடிகள்.

"செம்பொற் கொடியனையாள்
  கண்டாளைத் தான்காணான்"

கோவலன் இறந்துபட்டான் என்று கூற விரும்பாத அடிகள், கோவலனால கண்ணகியைக் காணக்கூட முடியவில்லை! என்று ஏங்குகிறார்.

"கண்டாள் அவன்தன்னைக்
  காணாக் கடுந்துயரம்"

கண்ணகிக்கு வந்தது. காதலும் வாழ்வும் பெறலாம் என்று பெற்றோருக்குக்கூடத் தெரியாமல் மதுரைக்கு வந்தவள், நடுத்தெருவில் நாடுவாரின்றி நாயகியாய் நலிகிறாள். நலிந்த உள்ளம் தெளிந்த நிலையில் வழக்கு மன்றம் நுழைகிறாள்.

பாண்டியன் செங்கோலின் நிலையை எடுத்துரைத்தான். கண்ணகி தன் கொடுவாழ்வின் தடுமாற்றத்தை எடுத்துக் கூறினாள். மன்னா! நாங்கள் கடந்து வந்த வழியில் காடும் இருந்தது கடும்புலியும் ஐந்தறிவுபடைத்த விலங்குகளும் இருந்தன. கடந்து வந்து என் காற்சிலம்பை விற்றுவரச் ஆறறிவு படைத்த உன் நாட்டில் முடியவில்லையே! என் கணவரைக் கொன்று விட்டார்களே! வாழ விரும்பி வந்தோம், கொலையா பரிசு? காட்டினைக் கடந்து வந்து நாட்டிலே ஆறறிவுடைய மக்களிடம் வாழமுடியவில்லையே என்று உள்ளம் வெதும்பி உரைக்கும் கண்ணகியின் சொற்கள் அவலத்தையே காட்டுகிறதன்றோ!

அவலச்சுவையின் உச்சத்தைஇறுதியாகக் காண்போம். மாதவியைப் பிரிந்து கண்ணகியை அடைந்தான் கோவலன். சிலம்புவிற்க மதுரைக்கு எழுகென எழுந்தாள் கண்ணகி. வழியில் துணையாக அமைந்தவர் கவுந்தியடிகள். சிலம்பு விற்கப் புறப்பட்ட நிலையில் மூவராய்த் தோன்றினர். துன்பம் தொடர்கையில் தொடர்பை நீக்கிக் கொண்டு விடுகிறார் கவுந்தியடிகள். மதுரையின் கீழ்த்திசை வாயிலுள் கணவனும் மனைவியுமாய்ப் புகுந்தனர்; சிலம்பு விலையாடாமல் கொலையாடிற்று; சிலம்பின் விலையாகத் தலை கொடுத்து உயிர் இழந்தான் கணவன். கிழக்கே நுழைந்த கதிரவன் மேற்கே செல்கையில் மேனி மழுங்குவதைப் போல், கண்ணகி ஒளி இழந்தவளாய், ஒருத்தியாய் வெறுத்த உள்ளத்தோடு மேற்றிசையில் வெளிப்படுகிறாள். கணவனோடு ஒளிபெற கீழ்த்திசை வாயிலில் நுழைந்தேனே ஒளி பெறுவிட்டாலும் வழியின்றித் தனியளாய் வறிதே மேற்றிசை வாயிலில் போகின்றேன்! என்று புலம்புகிறாள்.

வழித் துணைக்கு வந்த அடிகள் ஒதுங்கிவிட்டார்; அடைக்கலம் பெற்றோர் இடையில் கழிந்தனர்; கணவனையன்றிப் பிறரைத் துணையாகப் பெறாத ஒருத்தி - கணவனையும் இழந்துவிட்டால்...! கொடுமைதான். அந்த நிலையில் வெந்து வெதும்பிய உள்ளம் எழுப்பிய வேதனை ஒலியே இவை:

"கீழ்த்திசை வாயிற்
  கணவனொடு புகுந்தேன்
மேற்றிசை வாயில்
  வறியேன் பெயர்கேன"

அவலச் சுவையின் தலைவியாக முடி முதல் அடிவரை காணப்படும் கண்ணகி அவல நாடகத் தலைவி என்று கூறலாம்போல் தோன்றுகிறது.



அடுத்த கிழமை: "வீரச் சுவை"

வெண்பாப் போட்டி

இல்லற வாழ்வே இனிது.

கொல்லுகின்ற நஞ்சாய்க் கொடுங்கோலர் ஆட்சியிலே
எல்லாப் பொருள்விலையும் ஏறுதடா ! - இல்லாத
நல்லார் துறவறத்தை நாடுகையில் "எவ்வாறு
இல்லற வாழ்வே இனிது ?"

—அரிபழம், கரு செல்லமுத்து, புதுக்கோட்டை.

ஏற்ற மனையாள், இனிதிருக்க ஓரில்லம்,
போற்றுமொரு வாழ்வுக்குப் போதுபொருள், - தோற்றங்கண்(டு)
உள்ள மகிழ்மக்கள் ஒன்றிரண் டோடிருந்தால்
இல்லற வாழ்வே இனிது !

—சோம. திருநாவுக்கரசு, நாச்சியாபுரம்.

காதற் களவொழுக்கம் காலமெலாம் கைக்கொண்டால்
பூதலம் ஏற்குமோ பொன்மலரே ! - பேதத்தால்
தொல்லைதரப் பாவிசிலர் தோன்றுமுன்னே ஏற்போமவ்
வில்லற வாழ்வே இனிது.

- செஞ்சடையான், திருக்கழுக்குன்றம்.

காசு பறிக்கக் கனிவோடு பேசுகின்ற
வேசியரை நேசிப்பார் வீணரே ! - மாசற்ற
இல்லா ளுடனிருந்தே இன்பம் வளர்த்திடும்
இல்லற வாழ்வே இனிது !

—தி இர. வெங்கடேசன், சிந்தாதிரிப்பேட்டை.

மாயை எனச்சொல்லி மங்கையரைத் தூற்றுபவர்
வாயைக் கிழித்தெறிந்தான் வள்ளுவன்தான் - தூயநெறி
நல்லறங்கொள் இல்லறமாய் நாட்டினன் ஆனதினால்
இல்லற வாழ்வே இனிது.

தமிழ்க்கோபு, காரைக்கால்.

"காவி யுடையும், கமண்டலமும், நெய்தடவி
நீவி முடியா நெடுமுடியும் —பூவிழியாய் !
கொள்வதெலாம் பொய்மையடி ! கூறுங்கால் மெய்யறஞ்சூழ்
இல்லற வாழ்வே இனிது."

—இரே. சுப்பிரமணியன், காரை.

கமண்டலம் ஏந்திவட காசிக்குப் போன
நமதருந் தந்தை பெரியார் —அமைவுற,
தொல்லறம் கண்டாங்கு கூறினார் நல்லறமாம்
இல்லற வாழ்வே இனிது.

—இராம. பிச்சை, இராமநாதபுரம்.

முள்நிறைந்த தென்றே முகிழ்தாழை தள்ளுவரோ ?
தெள்ளுதமிழ்ப் பேரறிஞர் தேர்ந்துரைத்தார் —உள்ளபடி
அல்லல் இருந்தாலும் அன்பின் பொருள்சொல்லும்
இல்லற வாழ்வே இனிது

- எஸ். மாணிக்கம், பி. ஏ. இரணியல்.

ஈர இதழ்சுவைத்து எச்சில் தனைப்பருகி
ஆரத் தழுவி அணைத்துவக்கும்—பேரின்பம்
நல்கும்பெண் ணோடிணைந்து நாளும் உறைகின்ற
இல்லற வாழ்வே இனிது.

—மா. இராமலிங்கம், குடந்தை.

கோல முகத்தழகி ; கொஞ்சுமின்பச் சொல்லழகி ;
சீலமிகு பண்புடையாள் ; சீருடையாள்—ஞாலத்தில்
நல்லாள் துணையால் நடத்தும் அறம்வழுவா
இல்லற வாழ்வே இனிது !

—பா. பா. சோமநாதன், மயிலை.

இல்லாத தெய்வத்தை இந்நிலத்தில் உண்டென்றே
இல்லறத்தை விட்டோடும் ஈனர்காள் !—தொல்லுலகில்
இல்லாத முக்தியும் ஈங்குண்(டு) உணர்வீர்நல்
இல்லற வாழ்வே இனிது.

—எழிலரசன், மோட்டுப்பாளையம்.

ஒருத்திக் கொருவன்; ஒருவர்(கு)ஒ ருத்தி
பொருத்த முடனிணைந்து, பூவே - உரைத்திட்ட
நல்லபே றெல்லாம் நயந்து பெறவிழையும்
இல்லற வாழ்வே இனிது.

—திண்டுக்கல்லான்.

காற்றினிலே தென்றல், கனிகளிலே முக்கனிகள்,
ஆற்றினிலே பொன்னி, அருவிகளில் குற்றாலம்
நல்லின்பம் சேர்ப்பனபோல் நானிலத்து வாழறத்தில்
இல்லற வாழ்வே இனிது.

—க பா சு. மணி, சென்னை-12.

தேனும் இனிதல்ல தென்றல் இனிதல்ல
வானூர் மதியும் இனிதலவே மானிலத்தில்
செல்வம் நிலனும் இனிதல்ல சீர்தூக்கின்
இல்லற வாழ்வே இனிது.

—செ. கிருஷ்ணசாமி, அரக்கோணம்.

அன்பு மனைவி அருகிருக்கத் தாவிவரும்
இன்ப மழலை இனிதிருக்க —நண்பரே !
நல்லறம் கண்டிடவே நாளும் துணைசெய்யும்
இல்லற வாழ்வே இனிது

—மு. பி. பாலசுப்பிரமணியன், அய்யாபுரம்.

கோதில் மொழியாளைக் கூடி முயங்கிடுங்கால்
ஏதமில்லா இன்பம் எனக்கீந்தாள்;—ஆதலான்
நல்லறம் நீங்கி நலிவோரே ! யானுரைப்பல்
இல்லற வாழ்வே இனிது.

—முகில்வண்ணன், செய்துங்கநல்லூர்.

கொஞ்சும் மழலைமொழி கொள்ளாமல் சஞ்சலத்தால்
வஞ்சிக் கொடியாளை வாடவைத்தேன்;—நஞ்சொத்த
பொல்லாத் துறவறமே பூண்டேன் உலகத்தில் !
இல்லற வாழ்வே இனிது.

—ம. சண்முகம், சித்தையன்கோட்டை.

வஞ்சஞ்செய் கின்ற மனைவியுடன் வாழுதலிற்
சஞ்சலமே யில்லாத் "தனி" இனிது நெஞ்சத்தில்
நல்லறமும் நாற்குணமும்—நன்கமைந்த நங்கையுண்டேல்
இல்லற வாழ்வே இனிது.

—க. தவசியானந்தம், அருப்புக்கோட்டை.

கண்ணுடிக் கன்னம் கதைபேசக் கண்ணிரண்டும்
புண்ணுகும் நெஞ்சைப் புனலாக்கப்—பண்ணூர்ந்த
இல்லக் கிழத்தியுடன் இவ்வுலகில் நாம்வாழும்
இல்லற வாழ்வே இனிது.

—அன்பழகன், முத்தப்பேட்டை.

செஞ்சொற் கவிஇயற்றிச் செந்தமிழைக் காத்தென்னைக்
கொஞ்சி மகிழும் கொழுநனுடன்—கிஞ்சிற்றும்
அல்லன தீண்டா தருள்கொண்டு வாழும்எம்
இல்லற வாழ்வே இனிது.

மு. அன்னபூரணி, திருவேங்கம்பத்து.

வாழும் வகையிருந்தும் வாழ்ந்த வளமிருந்தும்
சூழும் துயரால் துடிப்பதேன் ?—பாழ்வடவர்
பொல்லாத ஆட்சி பொசுங்கினால் அன்றுகும்
இல்லற வாழ்வே இனிது.

—இரா. பத்மநாபன், மன்னார்குடி.

பண்புடையாள் கற்புடையாள் பாவையவள் கைப்பிடித்து
கண் போன்ற சுற்றமெலாம் காப்பாற்றி —மண்ணகத்தில்
இல்லையே என்பார்க்கும் ஈந்து மனைவாழும்
இல்லற வாழ்வே இனிது.

—இரா. நரசிம்மன், சோழவரம்.

கண்காட்டி நித்தம் கருந்தனத்தைத் தான்காட்டிப்
பொன்கூட்டும் வேசியர்பின் போவதினும்—எந்நாளும்
இல்லவள்பா லன்பாய் இணைய விருந்திட்டால்
இல்லற வாழ்வே இனிது.

—தி. நா. கிருட்டினசாமி, புதுவை.

காவியுடை பூண்டு கமண்டலத்தை ஏந்திடுவீர் !
நாவிடையே நால்வேதம் நாட்டிடுவீர் !—பாவியர்காள் !
பல்லிளித்துப் பாவையர்கைப் பற்றவிழைவதினும்
இல்லற வாழ்வே இனிது !

—மணிமாறன், கோவை.

ஆசிரியர் : கண்ணதாசன் அச்சிடுபவர், வெளியிடுபவர் : இராம. கிருட்டினன், எ. எல். எஸ். அச்சகம். 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு
தொலைபேசி எண் 83510.